# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 20 செவ்வாய்க்கிழமை (02-05-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:134

# வேம்பொடுகேணிக்கு படையினர் பின்னகர்வு!

## பளைப் பகுதியை கைவிட்டதை அடுத்து

யாழ்ப்பாணம்,மே2

**பளைப்பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய கடும் தாக்குதலை அடுத்து படையினர் அங்கிருந்து வடக்கே சுமார் இரண்டரை மைல் தூரத்தில் உள்ள வேம்பொடுகேணிப் பகுதிக்குப் பின்வாங்கியிருப்பதாக அரசுத் தரப்பில் நேற்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

இது தொடர்பாக அரசுத் தரப்பில் நேற்று விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் வருமாறு:-

ஆனையிறவு முகாமைவிட்டு வெளியேறிய படையினர் பளைப்பகுதியில் அமைத்திருந்த பிரதான காவலரண்களுக்கு முன்னால் கடும் சண்டை மூண்டது. புலிகள் மோட்டார், பீரங்கித் தாக்குதலை நடத்தினர்.

பளைக்கு வடகிழக்கே - கண்டி வீதிக்குக் கிழக்கே - இத்தாவில் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் மீதும் வடக்குத் தெற்குப் பகுதியிலிருந்து புலிகள் தாக்குதல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா மீதான தாக்குதல்; இந்தியா முன்னரே எச்சரித்தது

புதுடில்லி,மே2

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உயிரை இலக்குவைத்து விடுதலைப் புலிகள் ஒரு தற்கொலைத் தாக்குதலை நடத்தப் போகின்றார்கள் என்று இந்திய அதிகாரிகள் நேரகாலத்துடனேயே கொழும்பு அதிகாரிகளுக்கு எச்சரிக்கை வழங்கியிருந்தனர்.

பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்தை மேற்கோள்காட்டி 'இந்து' பத்திரிகை இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றது.

டிசெம்பர் 12, 14, 18 ஆகிய தினங்களில் ஏதேனும் ஒரு நாள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் பயிற்சிபெற்ற புலிகள் ஆனையிறவுச் சமரில் பங்குபற்றினர்!

கொழும்பு,மே2

மிக அண்மைக்காலத்தில் தமிழ் நாட்டில் விசேட கெரில்லாப் பயிற்சி பெற்ற நூறு விடுதலைப் புலிகள் அங்கிருந்து படகுகள் மூலம் திரும்பி ஆனையிறவுத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

பிந்திய இராணுவ உளவுத் தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகள் அமைப்பைச் சேர்ந்த - மேலும் நூறு தற்கொலைத் தாக்குதல் நபர்கள் தமிழ் நாட்டில் பயிற்சி பெற்றுள்ளதாகவும் உளவுத்தகவல்கள் கூறுகின்றன.

யாழ்ப்பாணத்தை விரைவில் கைப்பற்றுவதற்காக இவர்களையும் உடனடியாக வரவழைக்க விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முடிவு செய்திருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பயிற்சிகளை ஏற்பாடு செய்ததன் பின்னணியில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோபாலசாமி செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

- இப்படி அந்தப் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவித்தது. (உ)

### பதவிநீக்க உத்தரவு

கொழும்பு,மே2

வெளிவிவகார அமைச்சின் தகவல் தொடர்புப் பிரிவு இயக்குநர் ரவிநாத் ஆரியசிங்கவை அப்பதவியிலிருந்து அகற்றுமாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உத்தரவிட்டிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனையிறவை விடுதலைப் புலிகள் கைப்பற்றுவதற்கு முன்னரே அதைப் புலிகள் கைப்பற்றிவிட்டனர் என்று தெரிவிக்கும் அறிக்கையொன்று இவரால் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் -

அதனால் சீற்றமடைந்த அமைச்சர் அவரை நீக்க முடிவு செய்ததாகவும் -

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-7)

## இந்தியப் படைகளின் தலையீட்டை கோருகின்றனர் பௌத்த பிக்குகள்

### சகல பௌத்த பீடாதிபதிகளும் கூட்டாக தூதரகத்துக்கு நேரில் சென்று வேண்டுகோள்

கொழும்பு,மே2

"இராணுவ வெற்றிகளைக் குவித்து வரும் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு இந்தியப் படைகளை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்."

இலங்கையில் உள்ள சகல பௌத்தபீடங்களின் தலைவர்களும் நேற்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துக்கு நேரில் சென்று இந்தியத் தூதர் சிவ்சங்கர் மேனனைச் சந்தித்து அவரிடம் இவ்வாறு கூட்டாக வேண்டுகோள் விடுத்தனர்.

இலங்கையில் இருந்து இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தாங்கள் கோரியது மிகவும் தவறானது என்று இந்தியத் தூதரிடம் அவர்கள் நேரில் ஒப்புக்கொண்டதோடு அதற்காக மன்னிப்பும் கோரினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய நிலையில் இந்தியாவிடம் இருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும் -

இலங்கையின் சிறந்த அயல் நாடு என்ற வகையிலும் 'சார்க்' அமைப்பின் அங்கத்துவநாடு என்ற வகையிலும் பயங்கரவாதத்தைத் தடுப்பதில் இந்தியா உதவவேண்டும் என்பதே பௌத்த பீடங்களின் நிலைப்பாடாகும் -

1987ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு அமைய வடக்கு - கிழக்கு நெருக்கடியைத் தீர்க்க தனது சமாதானப் படையை இந்தியா அனுப்பியிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் மீண்டும் வேண்டுகோள் விடுக்கப்பட்டால் இந்தியா மீண்டும் உதவிகளை வழங்க முடியும் -

இவ்வாறு பௌத்த பீடங்களின் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

பௌத்த பீடங்களின் கோரிக்கை குறித்துக் கேட்டபோது பதிலளித்த கொழும்பிலுள்ள இந்தியதூதரகத்தின் பேச்சாளர் "ஐக்கிய இலங்கைக்குள்ளேயே பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படப் போவதில்லை" என்று தெரிவித்தார்.

பௌத்த பீடத்தின் இந்தக் கோரிக்கை குறித்து கருத்துத் தெரிவித்த பிரதிஅமைச்சர் டிலான் பெரேரா -

"நாட்டுக்குள் இந்தியத் துருப்புக்கள் கொண்டுவரப்படுமானால் தற்கொலை செய்துகொள்ளப் போவதாகத் தெரிவித்த அதே குழுவினர் தற்போது இந்திய இராணுவத்தின் உதவிகளைக் கோருவது விதியின் விளையாட்டாகும்" என்று சொன்னார். (உ-4)

## 50 படையினரின் சடலங்களை ஒப்படைக்கப் புலிகள் தயார்!

கொழும்பு,மே2

பளைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதலின் போது தம்மால் மீட்கப்பட்ட - நல்ல நிலையில் உள்ள - 50 படையினரின் சடலங்களைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் படையினரிடம் ஒப்படைக்கவுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை -

மேற்படி சடலங்கள் கையளிப்புக்காக விடுதலைப் புலிகள் வவுனியாவிலுள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியினை நாடியுள்ளனர் எனவும் -

உண்மையாகவே சடலங்கள் படையினருடையவை என இனங்காணப்பட்டால் அவற்றைப் படைத்தரப்புப் பொறுப்பேற்கும் எனவும் இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

இதேசமயம் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட பளைப் பகுதியில் படையினர் பலரின் சடலங்கள் சிதறிக் கிடப்பதாகவும் -

(12ஆம் பக்கம் பார்க்க)

### இன்று முதல் உண்ணாவிரதம் இருக்க முடிவு

யாழ்ப்பாணம்,மே2

யாழ்ப்பாணம் வருவதற்காக திருகோணமலையில் தங்கியுள்ள ஆயிரக்கணக்கான பயணிகள் கப்பல் சேவை ஒழுங்கு செய்து தருமாறு கோரி இன்று முதல் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகம் முன்பாக இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து நடத்தப்பட உள்ளது. (ஐ-7)

### குண்டு வெடிப்பில் மேஜர் பலி!

கொழும்பு,மே2

எம்பிலிப்பிட்டிய இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் மேஜர் ஒருவர் உடல் சிதறிப் பலியானார். மற்றொரு சிப்பாய் படுகாயமடைந்தார்.

குண்டுகளை வெடிக்க வைப்பது குறித்துப் பயிற்சி வழங்கிக் கொண்டிருந்தபோதே மேஜரின் கையிலிருந்த குண்டு ஒன்று வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

### குடாநாட்டில்

## நேற்று ஆரவாரமின்றி மேதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே2

உலகத் தொழிலாளர் தினமான மே தினத்தை ஒட்டிய நிகழ்ச்சிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் அமைதியான முறையில் நடைபெற்றன.

ஈ.பி.டி.பி. அமைப்பும், தீவுப்பகுதி தொழிற் சங்கங்களும் இணைந்து ஏற்பாடு செய்த பேரணி நேற்றுப் பிற்பகல் வேலணை வங்களாவடிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி ஊர்காவற்றுறை திறந்த வெளியில் இடம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இன்னும் சில தினங்களில் யுத்த களத்தில் திருப்பம்!

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு,மே2

அடுத்த சில தினங்களில் - வடக்கு யுத்தகளத்தில் பல திருப்புமுனைகள் நிகழவுள்ளன. அதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன என்று ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவிசாவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு பெரியளவில் ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. எனவே பாதுகாப்புத் தரப்புக் குறைபாடுகள் தொடர்பாக ஆராய்ந்து அதற்குப் பரிகாரம் காண அரசு உடனடியாக முன்வர வேண்டும் - என்றும் ரணில் தெரிவித்தார். (ஐ-3)

### மேதினம் சோபை இழந்தது:

## தெற்கில் நேற்று தீவிர பாதுகாப்பு!

கொழும்பு,மே2

மேதின நிகழ்வுகளை ஒட்டி கொழும்பிலும், நுவரெலியாவிலும் நேற்று கூட்டு இராணுவ - பொலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தப் பணியில் சுமார் 7000பேர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். விசேட தடை முகாம்களும் அமைக்கப்பட்டிருந்தன.

பேரணிகளில் கலந்து கொள்ள வந்தவர்கள் கடுமையாக விசாரிக்கப்பட்டுச் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

கண்ட கண்ட இடங்களில் வாகனங்கள் நிறுத்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. (ஐ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பொருள்களுடன் 'குமண' வருகிறது

வடமராட்சி,மே2

உருளைக்கிழங்கு மற்றும் அரிசி, சீனி போன்ற நிவாரணப் பொருள்களுடன் 'குமண' கப்பல் இன்னும் சில தினங்களில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று துறைமுக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இருவாரங்களாகப் பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிவந்த 'ஹண்டி' என்ற கப்பல் பொருள்களை இறக்கி முடித்துவிட்டு நேற்று முன்தினம் நண்பகல் பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டுச் சென்றது.

(ஐ-173)


## வாழ்த்துகின்றோம்

யாழ். மண்ணில் ஆசிரிய வாண்மையை விருத்தி செய்து எம்மவர் கல்வியை மேம்படுத்த இன்று ஆரம்பமாகும்

**கல்வியியல் கல்லூரி**

*நிலைத்து நின்று நிறைவான பயன்தர வேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.*

*இந்த உயர் கல்விப் பீடத்தின் பீடாதிபதியாகக் கடமையேற்கும் எம் மதிப்பார்ந்த ஆசான்*

**திருமிகு தி.கமலநாதன்**

அவர்களது சீரிய பணியால் இந்தக் கல்வி நிறுவனம் மேலும் உயர நன்றியோடு வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:~

*கோப்பாய் ஆசிரிய மாணவர்கள்*

93, 94 ஆண்டு ஆரம்ப பிரிவு A

(C/12018)



நீர்வேலி

ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூல் நிலையம்

ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் ஜனன தினமும் நூல் வெளியீட்டு விழாவும்

இடம்:- ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூல்நிலையம் கரந்தன் வீதி, நீர்வேலி.

காலம்:- 03-05-2000 புதன்கிழமை பிற்பகல் 1.00 மணி

தலைமை வகிப்பவர்:- கவிஞர் கலாநிதி இ.முருகையன் *(முன்னாள் பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம்)*

விளம்பர அன்பளிப்பு:-

S.S.யசோதரன் ஆட்ஸ்

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(75903)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 28 - 07 - 1921



மறைவு 02 - 04 - 2000

திருமதி

**இரத்தினாம்பிகை செல்வரத்தினம் J.P**

(மம்மி)

கிழக்கு மாதகல்

பெற்ற தாயைவிட பேரன்பு காட்டி நின்றீர்
வீரநடை போட்டு வீரமாய்க் கதைத்திடுவீர்
மேடை பல ஏறி பேச்சு வன்மை காட்டிடுவீர்
புன்சிரிப்பில் பால் கறந்திடுவீர். புத்திபல சொல்லிடுவீர்
சொந்தம் பலகூடி உறவு கொண்டாடியதே.
உன்துயர் துடைப்பதற்கு துணியாத விந்தை என்னோ?
செல்வமகள் செல்வராணி மறைந்ததும் அறிந்திடீர்
மகள் அன்பைத் தேடியதோ உந்தன் ஆவியதே
அந்தோ கொடுமையிது என்மனமும் கருகுதம்மா
மறைமுகமாய் உறங்கி மரணத்தைத் தழுவினீரோ
மம்மி என்று இனியாரை அழைத்திடுவேன் அம்மாவே?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை என்றும் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் மரணச்செய்தி கேட்டு இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*"சித்த ஆயுர்வேத சிகிச்சை நிலையம்"*
*வலந்தலை,*
*காரைநகர்.*

தகவல்:
Dr. S.சிவநேசன்
Dr. S.பொற்கலை
(மகன், மருமகள்)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இந்த நிலையில் முதலாளித்துவ வர்க்கம் மக்களை சுரண்டி வாழ்கிறது

## வடபிராந்திய தொழிற் சங்கங்களின் மேதினக் கூட்டத்தில் உரை

திருநெல்வேலி,மே2

யுத்த நிலைமையினால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள இந்த வேளையில் வெளிநாட்டுச் சக்திகளுடன் இணைந்து இந்த நாட்டின் முதலாளித்துவ வர்க்கம் மக்களைச் சுரண்டி வாழ்ந்து கொண்டிருக்கிறது. எமது அன்றாட வாழ்வில் இனி என்ன நடக்கும் என்ற சூழ்நிலையில் இன்று இந்த மேதினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

மேற்கண்டவாறு வடபிராந்தியத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் இ.தவராசா கூறினார்.

நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற மேதினக்கூட்டத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:-

தொழிலாளர் வர்க்கம் இன்று போர் நிலைமைகளாலும், சுரண்டல்களாலும், அடக்குமுறைகளாலும் பாதிக்கப்பட்டுள்ளது. ஒன்றுபட்ட - ஐக்கியப்பட்ட - தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலம் நாம் உரிமைகளைப் பெறவேண்டிய நிலையில் இருக்கின்றோம். உழைக்கும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆட்சியை நிலைநாட்ட வேண்டும்.

தங்கள் பொருளாதாரத்தை வளம்படுத்த அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் அடிவருடிகளும் இன்று அரசுக்கு உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. இதன் மூலம் தொழிலாளர் வர்க்கமும், ஏழை மக்களும் பெரும் பாதிப்படைய நேரிடுகின்றது - என்றார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் த.பஞ்சலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

எமது மாணவர்களுக்கான வரலாற்றுப் புத்தகங்களிலும் சமூகக் கல்வி பாடப்புத்தகங்களிலும் சிங்களக் கலாசாரத்தைப் பற்றிய விவரங்களும் வரலாறுகளும் மட்டுமே இடம்பெற்றுள்ளன. தமிழர், முஸ்லிம்கள் ஆகியோர் பற்றிய வரலாறுகள் இவற்றில் இடம்பெறவில்லை. இதற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு எமது சங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

### நிறைவேற்றப்படாத கோரிக்கைகள்

கடந்த வருடம் எமது சங்கம் பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து நடத்திய சுகவீனப் போராட்டத்தின் மூலம் பல உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்த அரசாங்கம் கல்வியில் பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்திய போதிலும் தென்பகுதியோடு ஒப்பிடுகையில் வடபகுதிக்கு எந்த வித நன்மையும் கிடைக்கவில்லை.

இங்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டபோதிலும் அவருக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. அதிகாரப் பரவலாக்கல் இடம்பெறாத காரணத்தினால் சகலவற்றிற்கும் திருகோணமலைக்கும் கொழும்புக்கும் எமது கோரிக்கைகளை கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

இன்று 60 வயதிற்கு மேற்பட்ட 37 பேர் வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகத்தில் மீள் நியமனம் பெற்று கடமையாற்றி வருகின்றனர். இதே வேளை பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற தகுதியுடைய பலர் இங்கு வேலைவாய்ப்பின்றி உள்ளனர்.

இன்றைய காலகட்டத்தில் தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவின் செயற்பாடு மிகவும் அவசியமானது. ஏனைய தொழிற் சங்கங்கள் நடத்தும் போராட்டங்களுக்கு எமது சங்கமும் ஒத்துழைப்பு வழங்கும் - என்றார்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் சார்பில் சி.கலாராஜ் உரையாற்றுகையில் கூறியதாவது:-

எமது சங்கம் கடந்த காலங்களில் நடத்திய பல்வேறு தொழிற் சங்கப் போராட்டங்கள் மூலம் எமது சில கோரிக்கைகளை வென்றெடுக்க முடிந்தது. ஆனால் ஊழியர்களை நிரந்தரமாக்கும் விடயத்தில் பல பிரச்சினைகள் - தடைகள் - ஏற்பட்ட வண்ணம் உள்ளன. அரசுக்கு ஊதுகுழலாகச் செயற்படும் அதிகாரிகள் இங்கு சிலவற்றை நடைமுறைப்படுத்த தயக்கம் காட்டி வருகின்றனர். கொழும்புக்குச் செல்லும்போதும் இங்குள்ள ஊழியர்களின் பிரச்சினைகளை இவர்கள் மேலிடத்துக்கு எடுத்துக் கூறுவதில்லை. போர் அனர்த்தங்களாலும், போக்குவரத்துத்தடைகள், தொலைபேசி செயலிழப்பு ஆகியவற்றினாலும் எமது சங்கம் மேலிடத்துடன் அடிக்கடி தொடர்பு கொண்டு செயற்படமுடியாத நிலையில் உள்ளது. எதிர்காலத்தில் வடபிராந்தியத் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்புக் கென தனியான அலுவலகம் ஏற்படுத்தப்படவேண்டும் - என்றார்.

வடபிராந்திய உப்பள ஊழியர் சேவைநலச் சங்கத்தின் பிரதிநிதி ரி.சிறிஇராமநாதன் உரையாற்றுகையில், உப்பு உற்பத்தியில் தன்னிறைவைக்காண வியர்வை சிந்தி உழைத்த உப்பள ஊழியர்களுக்கு 1997 ஆம் ஆண்டு முதல் வேதனமெதுவும் வழங்கப்படவில்லை.

30 வருடங்களுக்கு மேல் கடமையாற்றும் எமக்கு ஓய்வூதியம், பணிக்கொடை, ஊழியர் சேமலாப நிதி கொடுப்பனவு எதுவும் கிடைக்கவில்லை. உப்பள ஊழியர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடி வதங்குகின்றன. வறுமை தாங்காது நான்கு ஊழியர்கள் தற்கொலை செய்துகொண்டனர்

- என்றார்.

அகில இலங்கைத் தபால் தந்தி ஊழியர்கள் சங்கத்தைச் சேர்ந்த இ.மயில்வாகனம் இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த சா.தியாகலிங்கம் வடபிராந்தியக் கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் பெ.கனகரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்

கலை நிகழ்வும் இடம்பெற்றது.

(இ-


**ராஜா**

யாழ்ப்பாணம்

*அஜித், ஷாலினி*

நடிப்பில்

**அமர்க்களம்**

காட்சிகள்
10.30, 2.30,

(C/11604)

**நாகம்ஸ்.**

சுன்னாகம்

**விஜய், ஷாலினி, ரகுவரன்**

நடித்த

*கண்ணுக்குள் நிலவு*

(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)

(75883)

**லிபேட்டி**

அச்சுவேலி

கார்த்திக், ரோஜா, கௌசல்யா

நடிப்பில்

**சந்தித்த வேளை**

(புதிய வெளியீடு)
காட்சிகள் :10.30, 2.30

T.P- 070-212223
- 070-212678

FAX No. 0094 - 70212223

(75816)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பவளம் நவரத்தினம்

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பவளம் நவரத்தினம் நேற்று (01-05-2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மனைவியும், தன பாலச்சந்திரன், இரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன் ராஜிதேவியின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புச் சகோதரியும், றவிஷென், சங்கர், இராமச்சந்திரன் (மயூரன்), மதூசன், மதுரிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02-05-2000) செவ்வாய்க் கிழமை மு.ப. 11-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு.பரமேஸ்வரன் (ஈஸ்வரன்)
(மருமகன்)
(யாழ். தேசிய வீட அதி. சபை)

*நீதிராஜா வீதி,*
*(ஞானபண்டித வித். முன்பாக)*
*கொக்குவில் மேற்கு.*

(75919)

## திருமதி பிரேமராஸ் ராகினி

மண்டைதீவு முதலாம் வட்டாரம் இராமலிங்கம் பிரேமராஸ் அவர்களின் அன்பு மனைவி ராகினி 01-05-2000 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் இருபாலை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சிற்றம்பலம்-தவயோகம் தம்பதிகளின் அன்பு மகளும் மண்டைதீவு காலஞ்சென்ற இராமலிங்கம் - முத்துமணி ஆகியோரது அன்பு மருமகளும், நிறைமதி, எந்நிதி ஆகியோரது அன்பு மைத்துனியும், சந்திரலீலா, மனோகரி, பாஸ்கரன், சோமலதா, ஸ்ரீதரன், யோகேஸ்வரன் ஆகியோரது அன்புச் சகோதரியும், தர்சனாவின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (02-05-2000) செவ்வாய்க் கிழமை காலை 10 மணியளவில் அவரது இருபாலை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ.பிரேமராஸ் (கணவர்)
சி.பாஸ்கரன் (சகோதரன்)

*இருபாலை கிழக்கு,*
*கோப்பாய்.*

(75920)




உ
சிவமயம்

## கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம்

விக்கிரம புத்தாயிரமாண்டு மஹோற்சவம் எதிர்வரும் 09-05-2000 செவ்வாய் முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் திருவிழா இடம்பெறும். அடியார்கள் அனைவரும் விநாயகப் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

க.செந்தில்குமரன்
தலைவர்

செ.செல்வநாதன்
பொருளாளர்

யா.நந்தகுமார்
செயலாளர்

(C/12010)

# பலஸ்தீனம் -- இஸ்ரேல் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்!

ஜெருசலேம், மே 2

பலஸ்தீனியர்களின் மனக் கசப்புக்கும் இஸ்ரேலிய அமைச்சரவையின் அதிருப்திக்கும் மத்தியில் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

இப் பேச்சுவார்த்தையில் இரு தரப்புகளின் பிரதிநிதிகள் குழுக்களும் இஸ்ரேலின் சுற்றுலா நகரான எய்ராத்தில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

இதே சமயம் இஸ்ரேலின், கட்டுப்பாட்டில் உள்ள அரபு மக்கள் வாழும் பிரதேசத்தில் 174 வீடுகள் கொண்ட குடியிருப்பை உருவாக்க இஸ்ரேல் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தச் செய்தி பலஸ்தீனியர்கள் மத்தியில் எதிர்ப்பையும் மனக்கசப்பையும் உருவாக்கியுள்ளது.

இது இவ்வாறு இருக்க அரபு மக்கள் வாழும் பகுதிகளைப் பலஸ்தினர்களிடம் ஒப்படைக்க இஸ்ரேல் பிரதமர் தீர்மானித்திருந்தார்.

இந்த நடவடிக்கை பலஸ்தீனர்களுக்கு நம்பிக்கையூட்டும் என்று அவர் கருதினார்.

ஆனால் இதற்கு இஸ்ரேலிய அமைச்சரவை தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது;

இந்தச் சூழ்நிலையில் பரஸ்பரம் அவநம்பிக்கையும் மனக்கசப்பும் கொண்ட நீண்டகால எதிரிகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தை மேற்காசியாவில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துமா? என உலகம் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

(இ-ஒ)

## தமிழக அமைச்சர் விபத்தில் காயம்

சென்னை, மே 2

தமிழக அரசின் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் கார் விபத்தில் சிக்கிக் காயமடைந்தார்.

அவருக்குத் தற்போது மருத்துவமனயில் தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

சென்னையை அடுத்த நீலாங்கரையில் அமைச்சர் சென்ற கார் எதிரே வந்த மற்றொரு காருடன் மோதியதால் விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

(ஒ)

## யுத்தத்தின் வெற்றிவிழா; வியட்நாம் விழாக்கோலம்!

கொசிமின் சிற்றி, மே 2

அமெரிக்காவை நீண்ட யுத்தத்தின்பின் வெற்றிகொண்ட 25 ஆவது ஆண்டு விழாவை வியட்நாம் கோலாகலமாகக் கொண்டாடி வருகிறது.

வியட்நாம் மீது அமெரிக்கா ஆதிக்கம் செலுத்த முற்பட்ட போது ஏற்பட்ட நீண்ட போரில் 58 ஆயிரம் இராணுவத்தினரை அமெரிக்கா இழந்தது.

வியட்நாமிய தரப்பில் 10 லட்சம் கம்யூனிஸ்ட் கெரில்லா வீரர்களும் 20 லட்சம் பொது மக்களும் இந்த போரில் உயிரிழந்தனர்.

25 ஆம் ஆண்டு விழாவின் போது யுத்தத்தில் ஈடுபட்ட வியட்நாம் கெரில்லா வீரர்களுக்கு மரியாதை அளிக்கப்பட்டது.

அதேசமயம் பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

இராணுவ பலம் அதிகம் கொண்ட அமெரிக்காவை வியட்நாமிய கம்யூனிஸ்ட் கெரில்லாக்கள் வெற்றி கொண்ட வியட்நாம் விடுதலைப் போராட்டம் உலக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

(ஐ-ஒ)

## பாகிஸ்தான் மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்ரன், மே 2

காஷ்மீர் தீவிரவாதிகளைத் தூண்டி விடுவதுடன் அவர்களுக்குத் துணைநிற்பதாக பாகிஸ்தான் மீது அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத் துறையின் அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் உலக தீவிரவாதக் குழுக்களுக்கு ஆதரவு தருவதன் மூலம் பாகிஸ்தானும், ஆப்கானிஸ்தானும் சர்வதேசத் தீவிரவாதத்தின் முக்கிய கேந்திரமாக உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

(இ-ஒ)

## வன்முறை அச்சுறுத்தல் மத்தியில் புத்தாயிரத்தின் முதல் மே தினம்

லண்டன், மே 2

புத்தாயிரம் ஆண்டின் முதல் மேதினம் பிரதான நாடுகளில் வன்முறை அச்சுறுத்தலின் மத்தியிலேயே நேற்று கொண்டாடப்பட்டது.

பிரிட்டனின் லண்டன் நகரில் முதலாளித்துவ எதிர்ப்புப் போராட்டம் காரணமாக அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என அஞ்சப்பட்டது.

ஜேர்மனியில் பேர்லின் நகரில் ஹிட்லரின் கொள்கைகளைப் பின்பற்றும் நாஜிக் கட்சிகளினால் வன்முறை மூளலாம் எனக் கருதப்பட்டது.

ஈரானில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட தொழிலாளர் விரோதச் சட்டங்களை எதிர்த்து முன்னரே போராட்டம் நடந்து வந்ததனால் தலைநகர் தெஹ்ரானில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இதே சமயம் சிம்பாப்வே போன்ற சில நாடுகளில் வன்முறை ஏற்படலாம் என்ற பீதியினால் மேதினக் கொண்டாட்டங்கள் முற்றாகவே தவிர்க்கப்பட்டிருந்தன.

(இ-3)

## 2005 ஆம் ஆண்டு நளினி விடுதலையாக வாய்ப்பு

சென்னை, மே 2

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை வழங்கப்பட்டு பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்ட நளினியின் தண்டனை எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு முடிவடைந்து அதன் பின் அவர் விடுதலையாகலாம் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வழமையாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் 14 ஆண்டுகள் சிறையில் இருந்தபின்னர் ஆலோசனைக் குழுவின் முடிவையடுத்து விடுதலை செய்யப்படுவார்கள்.

இதேசமயம்பெரும்பாலான கைதிகள் நன்னடத்தை மற்றும் தண்டனைக் குறைப்புப் போன்ற காரணங்களால் 14 ஆண்டுகளுக்குப் பதிலாக 10 ஆண்டுகளிலேயே விடுதலை செய்யப்பட்டு விடுவர்.

ஆனால் கிரிமினல் குற்றங்கள் மற்றும் சதித் திட்டம் ஆகியவற்றில் நளினிக்குத் தண்டனை வழங்கப்பட்டிருப்பதால் அவருக்கு பொது மன்னிப்பு அல்லது தண்டனைக் குறைப்பு வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

1991 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கைதான நளினி இதுவரை 9 வருடம் 10 மாதங்களைச் சிறையில் கழித்துள்ளார். எனவே பொதுவான நடைமுறைப்படி. இன்னும் சுமார் 5 ஆண்டுகளே நளினியின் தண்டனையில் மிகுதியாக உள்ளன.

எனவே எதிர்வரும் 2005 ஆம் ஆண்டளவில் ஆலோசனைக் குழுவின் முடிவை அடுத்து அவர் விடுதலை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-6-ஒ-5)

## உஸ்பெக் அதிபர் இந்தியா விஜயம்

புதுடில்லி, மே 2

உஸ்பெக்கிஸ்தான் அதிபர் இஸ்மத் அத்பெனிபித்கரிமாவ் இந்தியாவுக்கு மூன்று நாள் விஜயம்மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இந்திய ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கிய தலைவர்களுடன் ஆலோசனை நடத்துவார் எனவும் அப்போது பயங்கரவாத தடுப்பு மற்றும் இரு நாட்டுப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும் எனவும் — தெரிவிக்கப்படுகிறது.

(இ-ஒ)

## மேற்குவங்க அமைச்சர் தீ விபத்தில் மரணமானார்

கல்கத்தா, மே 2

மேற்கு வங்க மாநில தொழில்துறை அமைச்சர் பிரிதேவ் கங்குலி நேற்று தீ விபத்தில் மரணமானார்.

வடக்கு கல்கத்தாவில் உள்ள குடியிருப்பில் வசித்த அமைச்சர் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்திலேயே அவர் பலியாகி உள்ளார்.

அவர் உடலில் 65 சதவீதம் தீக்காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி கங்குலி இறந்தார்.

மேற்படி தீவிபத்துக்கான காரணம் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை என பொலிஸார் கூறினர்.

மேற்கு வங்க இடது சாரி அரசின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கங்குலியின் மரணத்துக்கு அரசியல் சதி காரணமாக இருக்கலாம் என சந்தேகம் எழுந்துள்ளது.

(இ-ஒ)

## கிரிக்கெட் வரலாற்றில் முக்கிய கூட்டம் லண்டனில் இன்று தொடங்குகிறது

லண்டன், மே 2

சர்வதேச கிரிக்கெட்சபையின் வரலாற்றில் முக்கியமான ஒரு கூட்டம் லண்டனில் இன்று தொடங்குகிறது.

சமீப காலங்களில் கிரிக்கெட் வீரர்களை லஞ்ச ஊழலுடன் தொடர்புபடுத்தி ஏராளமான செய்திகள் வெளிவரத் தொடங்கியதை அடுத்தே இந்தக் கூட்டம் ஒழுங்குசெய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் லஞ்ச ஊழல் விசாரணைகளில் ஒத்துழைக்கும் எல்லாக் கிரிக்கெட் வீரர்களுக்கும் மன்னிப்பு அளிப்பது குறித்து மிக முக்கியமாக ஆராயப்படும்.

அதே சமயம் உலக கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் ஜக் மோகன்டால்மியா மீதும் விசாரணை மேற்கொள்வது தொடர்பாக கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

மிகஎதிர்பார்ப்புடன்நடக்கு இந்தக் கூட்டத்தில் பல உண்மையான தகவல்களும், லஞ்ச ஊழல் சான்றுகளும் கிரிக்கெட் வீரர்களால் வெளிப்படக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ—ஒ)

# சுப. வீரபாண்டியன் உட்பட 500 பேர் தமிழகத்தில் கைது!

## தமிழ்மொழி மூலக்கல்வியை ஆதரித்து ஆர்ப்பாட்டம்

சென்னை, மே 2

தமிழகத்தில் தமிழ் மூலம் பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதற்கு எதிராகசென்னை உயர் நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பின் நகலை எரித்துப் போராட்டம் நடத்திய சுப. வீரபாண்டியன் மற்றும் தியாகு ஆகியோர் உட்பட ஐந்நூறுக்கும்அதிகமானதமிழ் உணர்வாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆரம்பப்பள்ளிகளில் கட்டாயமாகத் தமிழ் மொழி மூலம் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற தமிழக அரசின் உத்தரவை சென்னை உயர் நீதி மன்றம் அண்மையில் ரத்துச் செய்தது.

இதனை எதிர்த்து தீர்ப்பின் நகலை — எரிக்கும் போராட்டம் ஒன்றைத் தமிழ்த்தமிழர் இயக்கம், தமிழ் தேசிய பொதுவுடைமைக் கட்சி, தமிழ் உரிமைக் கூட்டமைப்பு ஆகியவை உட்பட பல தமிழ் உணர்வு அமைப்புகள் இணைந்து நடத்தின.

மிக எழுச்சியுடன் இந்தப் போராட்டம் தமிழகம் எங்கும் நடைபெற்றதாகவும் —

இந்தப் போராட்டத்தில் கைதானவர்கள் பின்பு விடுதலை செய்யப்பட்டதாகவும் —

தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

## ஆயுதக் கிடங்கு தீ அனர்த்தம்

## 2 ஆயிரம் கோடி ரூபா ஆயுதங்கள் நாசமாகின

புதுடில்லி, மே 2

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலம் பரத்பூரில் இராணுவ ஆயுதக்கிடங்கு தீப்பற்றிக் கொண்டதில் 2 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் நாசமானதாக இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் ஏற்பட்ட தீ 3 நாள் போராட்டத்தின் பின் தற்போது அணைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆயுதக் கிடங்கில் தீப்பிடித்ததற்கான காரணத்தை ஆராய இராணுவ நீதிமன்ற விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

சிறு ரக ஏவுகணைகள் மற்றும் 14 ஆயிரம் தொன் வெடிமருந்து உட்பட பெருந்தொகை ஆயுதங்கள் விபத்தில் அழிந்திருந்தாலும் தென் மண்டல இராணுவத்தின் ஆயுதபலம் பாதிக்கப்படவில்லை என்று இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனர்.

(இ-ஒ)

## பொருளாதார வீழ்ச்சி

ஹராரே, மே 2

சிம்பாப்வேயில் வெள்ளை இன விவசாயிகள் மேல் நடைபெறும் தாக்குதல்களின் விளைவாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருவதாகக் கூறப்படுகிறது.

விவசாய உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதியால் வரும் கணிசமான வருமானம் கிடைக்காமல் போகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை —

சிம்பாப்வே நாட்டு பணத்தின் மதிப்பும் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(க-ஒ)

## நிதி நிறுவனத்தில் மோசடி

சென்னை, மே 2

சென்னையில் தலைமையகத்தைக் கொண்ட திரு.வி.க. நகர் நல நிதி நிறுவனத்தில் முறைகேடுகள் நடப்பதாக அந்த நிறுவனத்தில் பணத்தை முதலீடு செய்தவர்களில் சிலர் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

இதனை அடுத்து மேற்படி நிதி நிறுவனத்தின் நிர்வாகத்தை ஏற்பதற்கு ஓய்வு பெற்ற இரு நீதிபதிகளை உயர் நீதிமன்றம் நியமித்துள்ளது.

(இ-ஒ)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி லீலாவதி காளிமுத்து

பிறப்பு:- 1-1-1914 இறப்பு:- 2-4-2000

அன்புத் தாயாரின் இழப்பினால் துயர்தாங்கி ,நிற்கும்
எம் சக ஆசிரியை

**திருமதி அ. இ. யோசவ்**

அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் இதய பூர்வமான அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மசாந்திக்காகவும் இறைஞ்சி நிற்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச்சங்கம்**
**யா / திருக்குடும்ப கன்னியர் மடம்.**

(சி/11993)

# நான்காவது ஆண்டு நீங்காத நினைவலைகள்

தோற்றம்
02
—
12
—
1948



மறைவு
16
—
04
—
1996

## பொன்னையா பாலகிருஸ்ணேஸ்வரன்

(லங்கா சிமெந்து லிமிடெட்)

திதி: 02 – 05 – 2000

ஈரிரண்டு ஆண்டுகள் சென்றனவே
விட்டுப் பிரிந்து எம்மை
எப்போது வருவீர் ஐயா!
எம்மைக் களிப்பில் ஆழ்த்த.

அன்பின்,
**மனைவி, மகள், பெற்றோர், சகோதரசகோதரிகள், மாமி, மைத்துனன், மைத்துனி.**

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (75901)

# பஸ் சேவை நிறுத்தம்

சண்டிலிப்பாய், மே 2

வடபிராந்திய போக்குவரத்து சபையின் காரைநகர் டிப்போவினால் கடந்த மாதம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட காரைநகர் — தெல்லிப்பழை துர்க்காபுரம் பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பொன்னாலை, சுழிபுரம், சித்தன்கேணி, பண்டத்தரிப்பு, அளவெட்டி, மல்லாகம் ஆகிய இடங்களுக்கு ஊடாக இந்தப் பஸ் சேவை நடத்தப்பட்டு வந்தது. பிரயாணிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்ததை அடுத்து இந்தப் பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

(ஐ-135)

# ஆசிரிய ஆலோசகர்கள்

நெல்லியடி, மே 2

வடமராட்சி கல்வி வலயத்தில் நான்கு ஆசிரியர்கள் ஆசிரிய ஆலோசகர்களாக இரு கோட்டங்களுக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

சமயம், உடற்கல்வி, விஞ்ஞானம், ஆரம்பக்கல்வி ஆகிய பாடங்களுக்கே ஆசிரிய ஆலோசகர்கள் வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்படவுள்ளனர்.

கரவெட்டி விக்கினேஸ்வராவில் இயங்கும் கரவெட்டிக் கோட்டத்துக்கும் —

பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் இயங்கும் பருத்தித்துறைக் கோட்டத்துக்கும் — இவர்கள் நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(சு-109)

# மினிமுகாம் அகற்றப்பட்டது

நெல்லியடி, மே 2

கடந்த வாரம் அம்பன் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மினி இராணுவ முகாம் அங்கிருந்து அகற்றப்பட்டு நாகர்கோயில் இராணுவ முகாமுடன் கடந்த புதன்கிழமை முதல் இணைக்கப்பட்டுள்ளது.

(சு-109)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி இரா. சற்குணானந்த சர்மாவின்**
அன்புத் தந்தை

**அமரர் பிரம்மஸ்ரீ**
## சுந்தரராஜ் சர்மா பசுபதீஸ்வர சர்மா (ராஜன்)

அவர்கள் நல்லூரரான் திருவடி சேர்ந்தமையையிட்டுத் துயருறும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
**யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம், திருநெல்வேலி.**

(75870)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
31
—
10
—
1920



உதிர்வு:
02
—
04
—
2000

திருமதி
## செல்வரத்தினம் இரத்தினாம்பிகை
(J. P)

அம்மா இரத்தினாம்பிகையம்மா ஆருயிர் நீயம்மா!
சொல்லாமல் கொள்ளாமல் சென்றதும் ஏனம்மா?

இன்று (02 – 05 – 2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

செ. லிங்கேஸ்வரன் (மகன்),
மாதகல் கிழக்கு,
மாதகல். (75902)

# இதயத்துயர் நீங்காத பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

()

அன்னை மடியில்:
13-10-1950

ஆண்டவன் அரவணைப்பில்:
02-05-1990



## திருமதி தேவராசா ஆரோக்கியம்

''கல்லறையில் உம்மை வைத்துக் கண்ணீரால் மூடிவிட்டோம். உலகில் வைக்க இயலாமல் எம் உள்ளங்களில் வைத்து உருகுகின்றோம்.''

எம் இனிய அம்மாவே!
எம்மை விட்டு நீ சென்று
பத்தாண்டுகள் உருண்டோடி வந்தாலும்
ஈரைந்து மாதங்கள் கருவோடுசுமந்து
எம்மைப் பெற்ற அம்மாவே!
உம் நினைவு எம்மனதில்
அலையாய் அடிக்குதம்மா!
அம்மா! உன்னைத்தேடி
எந்நாளும் அலைகின்றோம்!
உமது ஆத்ம சாந்திக்காய்
மரியன்னையின் பாதாரவிந்தத்தில்
வைத்து நிதமும் தொழுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
**கணவன், பிள்ளைகள், தாய், சகோதரர்கள், உற்றார், உறவினர்.**

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (75898)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி





## கார்த்திகேசு இராமலிங்கம்

உதிப்பு: 10. 04. 1922
உதிர்வு: 15. 04. 1998

## இராமலிங்கம் தங்கம்மா

உதிப்பு: 04. 06. 1927
உதிர்வு: 06. 05. 1998

திதி: 02 – 05 – 2000

அன்பின் தெய்வங்களே!
பாசத்தால் எமைக் காத்து
பார்தனில் எமைத் தவிக்கவிட்டு
நிலைக்காத இவ்வுலக வாழ்வினில்
நிலையான வாழ்வு தேடிச் சென்றீர்களோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீர் மல்க வேண்டி நிற்கும்
**– குடும்பத்தினர்.**

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி. (சி/12011)

# உதயன்

## கவலை உண்டா?

ஆனையிறவு வீழ்ச்சியின் பின்னர் அரசாங்கத் தரப்பு உட்பட தென்னிலங்கை வட்டாரங்களில் போரைத் தீவிரப்படுத்துவதற்கான ஏற்பாடுகள், நடவடிக்கைகள் குறித்தே அதிகமாகப் பேசப்படுகிறது. சமாதான முயற்சிகள் கூடைக்குள் வீசப்பட்டனவோ என்று நினைக்குமளவுக்கு அங்கே போர் ஆர்வம் மிகுந்திருக்கிறது

சமாதானத்தை நாடியுள்ளதாகக் கூறிய மக்கள் அரசாங்கம் ஒன்று, கோடி கோடியாகப் பணத்தைச் செலவிட்டு நவீன போர் ஆயுதங்களையும் போர்த் தளபாடங்களையும் வாங்குவதற்கான ஆயத்தங்களைச் செய்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளைத்தோற்கடித்து இராணுவ பலத்தில் மேலோங்கிய நிலையை உருவாக்குவதற்கே இந்த ஏற்பாடுகள் என்பதில் சந்தேகமில்லை. பதின்மூன்று மாத கால சமாதான முயற்சிகளை விடுதலைப் புலிகள் குழப்பிவிட்டதால் இனிப் போரைத் தவிர வேறு மார்க்கமில்லை என்ற நிலைப்பாட்டுக்கு அரசு வந்திருப்பதாகத் தோன்றுகிறது.

ஆனையிறவு வீழ்ச்சிக்குப் பின்னர் (வெளிநாட்டிலிருந்து வந்து) நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஆற்றிய உரையில் விடுதலைப்புலிகள் போர் நடத்தும் போது நாம் எவ்வாறு அமைதி காக்க முடியும் என்ற தொனி ஒலித்தது.

1994 ஆம் ஆண்டிலும் —

சமாதானப் பேச்சுக்களை விடுதலைப்புலிகளே முறித்தார்கள். அதனைப் பொறுத்துக் கொண்டு, பார்த்துக் கொண்டு ஓர் அரசாங்கம் எப்படி அமைதி பேணமுடியும் என்று கேட்டே, போர் தீவிரமாக்கப்பட்டது. இம்முறையும் அரசாங்கம் அதே நிலைப்பாட்டையே கைக்கொள்கிறது என்பது நன்கு புலனாகின்றது.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமற்றது உகந்ததல்ல என்பதனைக் கடந்த ஆறு வருடகால அனுபவத்தில் உணர்ந்தே, சமாதான வழியில் அதனைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதி மக்களிடம் சமாதானத் தீர்வுக்கு ஆணை கேட்கிறார் என்று எல்லோரும் — மக்கள் — நம்பினார்கள். ஆனால் அது அவ்வாறு அன்று என நினைக்கும் அளவுக்கு இப்போதைய போக்கு உள்ளது!

அரசாங்கத்தின் நாளாந்தச் செலவுகளுக்குரிய பணத்தைத் திணைக்களங்களுக்கு வழங்க முடியாத நிலையில் திறைசேரி திண்டாடுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஏன், படையினருக்கு உணவு வழங்கியதற்கான கொடுப்பனவைச் செய்ய முடியாது திறைசேரி 'ததிகிணத்தோம்' போடுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இவ்வாறிருக்க கோடிக்கணக்கான ரூபா பணத்தைச் செலவிட்டு அரசு நவீன போர் ஆயுதங்களை வாங்கப் போகிறது. சர்வதேச ஆயுத முகவர்களின் — அவர்களின் உள்நாட்டுப் பிரதிநிதிகளின் — தூண்டுதலின் பேரிலேயே, அரசு போரைத் தீவிரப்படுத்த முனைவதாக விடயம் தெரிந்த வட்டாரங்கள் கருதுகின்றன.

நாட்டு நலனையும் மக்கள் நலனையும் புறக்கணித்து, ஆயுத வர்த்தகர்களின், முகவர்களின் பொறியில் அரசு விழுமானால் இந்த நாட்டில் அழிவொன்றே மிஞ்சும். நாட்டைப் பீடித்துள்ள போர் என்ற சாபக்கேடு நீங்குவதற்கு பாதை திறக்காது. அழிவும் வறுமையுமே இலங்கையாகும். இது குறித்து அரசுத்தலைவர்களுக்கு என்ன கவலை?...!

# குமார் படுகொலையின் முக்கிய சந்தேக நபர் சமன் கைதானார்!

மூத்த தமிழ் அரசியல்வாதி குமார் பொன்னம்பலம் படுகொலை தொடர்பான முக்கிய சந்தேக நபர் மொறட்டு சமன் என்பவர் கைதாகியுள்ளார். அவர் தொடர்பான விசாரணைகள் முற்றுப் பெறாத நிலையில் அவரை விளக்க மறியலில் வைக்க அரசியல்வாதிகளால் பொலிஸாருக்கு அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன. இது தொடர்பாக ''ராவய'' சிங்கள வார இதழில் வெளியான செய்தியின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

பிரபல தமிழ் அரசியல்வாதியான குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டசம்பவத்திற்குப்பொறுப்பானவர் என நம்பப்படும் மொறட்டு சமன் அல்லது மதுரப்பெரும அப்புஹாமி லாகே நிமல்சிறி காலிங்கவங்ஸ என்னும் முக்கிய நபர் கைதுசெய்யப்பட்டுள்ளபோதிலும் அந்தக் கைது தொடர்பான பொலீஸ் விசாரணைகள் முழுமையாக முற்றுப் பெறுவதற்கு முன்னர் அவரை நீதிமன்றில் ஆஜர் செய்து விளக்க மறியலில் வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரியவருகிறது.

பொதுவாகப் பாதாள உலகைச் சேர்ந்த குற்றவாளி ஒருவர் கைதுசெய்யப்படின் அவர் தொடர்பான பொலீஸ் விசாரணைகள் முடிவடையும் வரை தடுத்துவைக்கும் ஆணையின் கீழ் அவர் தடுத்து வைக்கப்படுவார். ஆனால் குமார் பொன்னம்பலம் படுகொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள இந்தச் சந்தேக நபர் தொடர்பான பொலீஸ் விசாரணைகள் முடிவுபெற முன்னர் அவரை நீதிமன்றில் ஆஜர் செய்து விளக்க மறியலில் வைப்பதற்கு அரசுடன் தொடர்புடைய 4 அரசியல்வாதிகள் பொலீஸாருக்கு அழுத்தங்கள் கொடுப்பதாகத் தெரியவருகிறது.

மொறட்டு சமன் என்பவர் அரசாங்கத்தின் அனுசரணையுடன் செயற்படும் ஒரு குற்றக் கும்பலைச்சேர்ந்த பிரபல கேடி எனக் கருதப்படுகிறது. மொறட்டுசமனும் மற்றும்இவரது 6 சகாக்களும் கடந்த மாதம் 6 ஆம் திகதி மருதானையில் உள்ள தேவ நம்பியதீஸ்ஸ வீதியில் உள்ள வீடொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டபோது அவர்களிடம் 2 றிவோல்வர்கள், 9 மி.மீ. ரக கைத்துப்பாக்கி ஒன்று, அதற்கான ரவைகள் 40 ஆகியன கைப்பற்றப்பட்டன. மொறட்டு சமன் 20 கொலைகள், 15 கொள்ளைகள், 10 ஆள்கடத்தல் சம்பவங்கள் தொடர்பாகப் பொலீஸாரால் தேடப்பட்டு வந்துள்ளார். மேலும் இவரைக் கண்ட இடத்தில் கைது செய்யும் பிடி ஆணைகள் பல நீதிமன்றங்களினால் பிறப்பிக்கப்பட்டும் உள்ளன.

சாந்த என்ற பெயரில் குமார் பொன்னம்பலத்துடன் பழகிவந்தவரும் படுகொலை நடந்த தினத்தன்று குமாரின் வீட்டிலிருந்து அவரது 'பென்ஸ்' ரகக் காரில் குமாருடன் சென்றவரும் இந்த மொறட்டு சமன் என்பவரே எனத் தெரிவிக்கப்படுகிறது.

குமாருடன் காரில் சென்ற மொறட்டு சமன் வெள்ள

## இரகசியங்களை மறைக்க அரசியல் வாதிகள் தலையீடு

வத்தையில் இறங்கினார் எனவும் பின்னர் இராமகிருஷ்ண வீதியில் குமாரின் காரை மறித்து 9 மி.மீ கைத்துப் பாக்கியால் சுட்டு குமாரைப் படுகொலை செய்தார் எனவும் விசாரணைகளை மேற்கொள்பவர்கள் நம்புவதாகத் தெரியவருகிறது.

குமார் பொன்னம்பலத்தின் படுகொலையில் குமார் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் இந்த மொறட்டு சமனே என 'லக்பிம' வார இதழும் குற்றஞ் சாட்டியிருந்தது.

சமன் கைது செய்யப்பட்ட வேளையில் பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஜக்கி என்பவரும் மற்றுமொரு பொலீஸ்காரரும் குமாரின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற தகவல் வெளியானது. இந்தப் பொலீஸ்காரர் குமாரின் படுகொலையின் பின்னர் தலைமறைவாகியுள்ளார் எனவும் குமாருக்குச் சொந்தமான கையிலெடுத்துச் செல்லும் தொலைபேசியையும்தன்னுடன் வைத்திருக்கிறார் எனவும் பொலீஸாரில் ஒரு தரப்பினர் கருதுகின்றனர்.

மொறட்டு சமன் குமார் பொன்னம்பலத்தின் படுகொலையுடன் மட்டும் தொடர்பு கொண்டிருக்கவில்லை. அரசாங்கத்தைச் சேர்ந்த சில தலைவர்களின்



மொறட்டு சமன்

தேவைக்காக பல்வேறு குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் எனவும் —

அவரைத் தடுத்துவைப்பதற்கு இடமளிக்காது விளக்க மறியலில் வைப்பதற்கு பல அரசியல்வாதிகள் பொலீஸாருக்கு அழுத்தங்களைக் கொடுக்கின்றனர். இது குமார் பொன்னம்பலத்தின் படுகொலை தொடர்பான தகவல்கள் உட்பட மொறட்டு

**தமிழில்: கஜனி**

சமனால் அரசியல்வாதிகளின் தேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏனைய குற்றச் சம்பவங்கள் தொடர்பான தகவல்களும் வெளியாகலாம் என்ற காரணத்தினால் ஆகும். இவ்வாறு ஒரு சில பொலீஸ் அதிகாரிகள் கருதுகின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் மொறட்டுவ பகுதியில் இடம்பெற்ற இப்படுகொலைக்குப் பயன்படுத்திய ரீ-56 ரகத் துப்பாக்கியை நாரஹென்பிட்டியைச் சேர்ந்த சூட்டி என்பவர் தனக்கு வழங்கியிருந்தார் என இப்படுகொலை தொடர்பாக கல்கிஸ்ஸ பொலீஸார் மேற்கொண்ட விசாரணையின் போது மொறட்டு சமன் தெரிவித்துள்ளார்.

சூட்டி என்பவரும் தற்போது பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். ரீ — 56 ரகத் துப்பாக்கியை சாரத சஞ்ஜீவ என்பவர் தனக்கு வழங்கினார் எனவும் சாரத சஞ்ஜீவ தற்போது அமைச்சர் ஒருவரின் மகனின் பாதுகாப்பில் உள்ளார் எனவும் சூட்டி பொலீஸாருக்குத் தெரிவித்துள்ளார். அமைச்சரின் மகனின் பாதுகாப்பில் சாரத சஞ்ஜீவ இருப்பதால் அவரைக் கைது செய்வது பொலீஸாருக்குப் பிரச்சினையாக உள்ளது.

தடுத்துவைக்கும் ஆணையின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள மொறட்டு சமனை பொலீஸ் விசாரணைகள் முற்றுப் பெறுவதற்கு முன்னர் விளக்கமறியலில் வைப்பதற்கு அரசியல்வாதிகள் அழுத்தங்கள் கொடுத்துவருகின்றனர் எனக் கூறப்படும் தகவலை உறுதிப்படுத்த கல்கிசைமூத்த பொலீஸ் அத்தியட்சகர் டபிள்யு தயாரத்னவிடம் விசாரித்தபோது ''அழுத்தங்கள் எத்தனை வந்தாலும் பொலீஸ் விசாரணைகள் முடியும் வரை விளக்க மறியலில் வைக்க நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது'' எனப் பதிலளித்துள்ளார்.

குமார் பொன்னம்பலத்தின் படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலீஸ் இன்ஸ்பெக்டர் நுவன் வெத்தசிங்காவிடம் மொறட்டு சமன் குறித்து விசாரித்தபோது ''மொறட்டுசமனை விசாரிக்க வேண்டிய தேவை எனக்கும் உள்ளது. ஆனால் கைது செய்யப்பட்ட பின்னர் கல்கிஸ்ஸ பொலீஸ் நிலையத்திற்கு எனக்குத் தெரிவிக்காமலேயே கொண்டு சென்றுள்ளனர்'' எனத் தெரிவித்துள்ளார்

சாந்த என்ற பெயரில் குமார் பொன்னம்பலத்துடன் தொடர்பு வைத்திருந்தவர் தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் மொறட்டு சமன்தானா என்பதை உறுதி செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளீர்களா? எனக் குமார் பொன்னம்பலத்தின் வீட்டில் விசாரித்தபோது, திருமதி குமாரும் மகனும் வெளிநாடு சென்றுள்ளதாகவும் அவர்கள் நாடு திரும்பியதும் அடையாளம் காட்டுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

★

> **• தய வாக்கு**
>
> சாவு வருவதற்கு முன்பே ஒரு கோழை பல தடவைகள் செத்து விடுகிறான்.
>
> - ஷேக்ஸ்பியர்

## நாளை

**சித்திரை 21**
**புதன்கிழமை**
திதி: சதுர்த்தசி
நண்பகல் 11.59 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
முன்இரவு 10.32 வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம்: 4.26 5.56
ராகுகாலம்: 11.56–1.26
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## இரு வெவ்வேறு சம்பவங்களில் கொழும்பில் அறுவர் சுட்டுக்கொலை

### பாதாள உலகக் கோஷ்டிகளிடையே மோதல்

கொழும்பு, மே 2

பொறளை மற்றும் வெல்லம் பிட்டியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நடந்த இருவேறு சம்பவங்களில் ஆறு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

அன்று மாலை 6 மணியளவில் பொறளை பேஸ்லைன் வீதியில் ஓட்டோவில் வந்த குழு ஒன்று ஓட்டோவில் வந்த மற்றொரு குழு மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 இளைஞர்கள் கொல்லப்பட்டனர்; ஒரு பெண் காயமடைந்தார்.

வெல்லம்பிட்டி சிங்கபுர என்னும் இடத்தில் அன்று இரவு 8 மணியளவில் வீட்டில் நுழைந்த ஒரு குழு அங்கு தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் இரு இளைஞர்கள் கொல்லப்பட்டனர்; மற்றுமொருவர் காயமடைந்தார்.

பதாள உலக குழுக்களுக்கிடையில் நிலவும் பகைமை காரணமாக இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(இ-3)

## சுழற்சிமுறைக் கடன

வலிகாமம் தெற்கு, மே 2

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழையில் உள்ள பன்னாலைக் கிராமத்தில் மீளக் குடியமர்ந்த 50 குடும்பங்களுக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் சுயதொழில வாய்ப்புக்கான சுழற்சி முறைக்கடன் வழங்கப்பட உள்ளது. (ஐ-152)

# யாழ்ப்பாணம் தேசிய
# ஆரம்ப விழா
02-05

## நல்லைக் குருவின் அருளாசி

அன்புசால் பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி புதிதாக எமது மண்ணிலே ஆரம்பிப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். யாழ்ப்பாணத்துக்கு பெருமை கல்வியே. அக்கல்வியை வழங்கும் ஆசிரியர்களுக்கு முன் பயிற்சியை இந் நிறுவனம் சிறப்பாக வழங்குவதாக! சமய, சமூக கலாசார பணிகள் இக் கல்லூரியூடாக செழிப்பதாக! இக்கல்லூரியை உருவாக்க அயராது உழைத்த அனைவருக்கும் பீடாதிபதி, விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இறைவன் ஆசிகிடைக்க பிரார்த்திக்கின்றோம். இக்கல்லூரி பல்லாண்டு காலம் தொடர்ந்து சமூகத்திற்கு தொண்டாற்ற இறைவனை வேண்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்.**

## யாழ்.அரச அதிபரின் செய்தி

ஆசிரியர் கல்வியின் அடி அத்திவாரம் ஆசிரியர்கள் வதிவிடத்தில் இருந்து முழுநேரமாகத் தங்களைப் பயிற்றுவித்துக் கொள்வதாகும். இதற்கான சந்தர்ப்பத்தை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி இன்றிலிருந்து வழங்கவுள்ளமையை இட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இக்கல்லூரி மேலும் வளர்ச்சியடைவதுடன் புதிய கல்லூரியின் கட்டட வேலைகளும் தொடங்கப்பட வேண்டும்.

இக்கல்லூரியின் தோற்றம் யாழ்ப்பாண ஆசிரியர் கல்வி, பொதுக்கல்வி சார்ந்த உயர்பெறுமான நடைமுறைகளுக்கு வித்தாக அமையட்டும். இக்கல் லூரியின் பீடாதிபதி திரு.திருநாவுக்கரசு கமலநாதன், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**க. சண்முகநாதன்,**
**அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.**



## நீண்டகாலக் கனவு நிறைவேறுகிறது



ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்போது நான் ஓர் இணைக்கப்பட்ட விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில்.

வீரகேசரிப் பத்திரிகையில் கல்விக் கல்லூரிகள் பற்றி ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது. இலங்கையில் உருவாகியுள்ள கல்விக்கல்லூரிகள் பற்றிய விவரங்கள் அதிலிருந்தன.

அதில் யாழ்ப்பாணம் பற்றியோ அங்கு ஒரு கல்விக் கல்லூரி தேவையென்பது பற்றியோ எதுவுமில்லை. ஆனால் வருங்காலங்களில் கல்விக்கல்லூரி மட்டுமே ஆசிரியர்களை வழங்கும் உத்தியோக பூர்வ நிலையங்களாகச் செயற்படும் என்ற குறிப்பு இருந்தது. (இது பட்டதாரி ஆசிரியர்களுக்கு விதிவிலக்கு).

அப்படியானால் யாழ்ப்பாண சமூகத்தினருக்கு வருங்காலங்களில் அந்த வாய்ப்புக் கிடைக்காதா என்ற ஏக்கம் தோன்றிற்று. அந்த கட்டுரையை எடுத்துச் சென்று அன்றைய கல்விப்பணிப்பாளரிடம் காண்பித்தேன். ஆறுதலாகப்படித்தார். அடுத்த தடவை கொழும்பு செல்லும்போது தவறாது உரியவர்களுடன் கதைத்து நடவடிக்கை மேற்கொள்வேன் என்றார். கொழும்பு சென்று வந்து தான் கதைத்துள்ளதாகவும் சரியான பதில் கிடைக்கவில்லையென்றும் கூறினார்.

தொடர்ந்து மிக நீண்டகாலம் கல்விக்கல்லூரி பற்றிய எண்ணம் யாழ்ப்பாணத்தில் மௌனமாகவே இருந்தது. 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வு வவுனியாக் கல்விக்கல்லூரியில் என்னைத் தொழில் கொள்ளச் செய்தது. யாழ்ப்பாணத்திலிருந்து அதிக விண்ணப்பங்களைப் பெற்று யாழ்ப்பாணம் வந்து நேர்முகப்பரீட்சை நடத்தி மாணவர்களைத் தெரிவுசெய்ய ஊக்குவிக்க முடிந்தது. வெற்றியும் கிடைத்தது.

அதன் வளர்ச்சிப்படியாக யாழ்ப்பாணத்தில் கல்விக்கல்லூரி அமைக்கப்பட வேண்டும் என்ற வழிப்புணர்வு சகல மட்டங்களிலும் தோன்றி வரலாயிற்று.

கல்வியாளர்கள், தொழிற்சங்கவாதிகள், அரசியல்வாதிகள் பலரும் ஒரே குரலில் இணைந்து தொழிற்பட்டனர். அதன் பயனாக புத்தாயிரமாம் ஆண்டில் புதுப்பொலிவுடன் உதயமாயிற்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி.

அரசும் உதவிகள் செய்ய முனைந்தது. ஆனால் நாட்டு நிலைமை, போக்குவரத்து சீர்கேடுகள் என்பன சாட்டாகி உடனடியாக எதுவும் கிடைக்க முடியவில்லை. அதை நம்பிப்பயனில்லை. யாமிருக்கப்பயமேன் என்று ஆக்கப்பணிகளில் ஈடுபட முன்வந்தனர் கோப்பாய் வைத்திய கலாநிதி எஸ்.தியாகராசா அவர்களும் நண்பர்களும். ஆதரவாளர்களிடமிருந்து ஆதரவு பெருகிற்று. யாழ் மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர்களும் உறுதுணையாகினர்.

அறிஞர் "சொக்கன்" அவர்கள் கூறியது போல் "வாராது வந்த மாமணி" யாழ்ப்பாணத்தின் சொத்தாகிற்று. அதன் உருவாக்கத்தில் எனது உழைப்பும் சேர்ந்து கொள்ள வாய்ப்புத்தந்த இறையருளுக்கு நன்றி கூறிப் பிரார்த்திக்கின்றேன். இன்றைய காலகட்டத்தில் எமது கல்வி வளர்ச்சியில் கல்விக் கல்லூரியின் தேவை கட்டாயமானது. புதிய சிந்தனைகளைப்பெற புத்தாக்கங்களைப் புரிய கல்விக்கல்லூரிகளின் செயற்பங்குகள் சிறப்பானவையாகவுள்ளன. அந்தப்பயனை இனி யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் பெற முடியும் என்பது நிதர்சனமானது.

கல்லூரி உருவாக உதவிய இறையருள் அதன் வளர்ச்சிக்கும் உதவ அருள்தர வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**திருநாவுக்கரசு கமலநாதன்.**
**பீடாதிபதி.**

## துணைவேந்தரின் செய்தி

யாழ்ப்பாணத்தில் இன்று கல்விக் கல்லூரி தாமதமாகவேனும் ஆரம்பிக்கப்படுவது இப்பிரதேசத்தின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவு செய்வதாக உள்ளது. 1980களிலிருந்து நாட்டின் பல பகுதிகளில் புதிதாக கல்விக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டபோதும், யாழ்ப்பாணம் அன்று ஒரு கல்விக் கல்லூரியைப் பெறத்தவறிவிட்டது. இதனால் தமிழ் மொழிப் பாடசாலைகளுக்குப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் தொடந்து இருந்து வருகின்றன.

1960களுக்கு முன்னர் யாழ்.குடாநாட்டில் இருந்து ஐந்து ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் நாட்டில் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதன் காலப்போக்கில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின் எண்ணிக்கை குறைந்ததும் கல்விக்கல்லூரி அமைப்பது தாமதமாகியதும் ஆசிரியர் பற்றாக்குறை குறிப்பாக ஆரம்பப்பாடசாலை ஆசிரியர் பற்றாக் குறையை உருவாக்கின.

இன்று ஆரம்பிக்கப்படவிருக்கும் கல்விக்கல்லூரி ஒரு சில கற்கை நெறிகளுடன் செயற்படவிருப்பினும் காலக்கிரமத்தில் அது பல்வேறு கற்கை நெறிகளைக் கொண்டும் திட்டமிட்டபடி தனக்கென ஒரு புதிய கட்டடத் தொகுதியைக் கொண்டும் செயற்படவேண்டும். வவுனியா,ஸ்ரீபாத மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட பிற கல்விக் கல்லூரிகளைப் போன்று இருப்பிட வசதிகள் உள்ளிட்ட பௌதிக வளங்களைக் கொண்ட ஒரு முழுமையான கல்விக் கல்லூரியாக இது திகழ வேண்டும்.

மேலும் யாழ்ப்பாணத்தின் நீண்ட ஆசிரியர் பாரம்பரியத்தையும் இன்றைய நவீன கல்வித் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு சிறந்த கல்விக் கல்லூரியாக இது விளங்க இறைவனின் அருள் என்றும் கிட்டுவதாக!

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
**துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.**

## வழிகாட்டியாக அமைவதாக!

கல்வியின் குறிக்கோள்களுக்கு அமைய ஆசிரியர்களை உருவாக்கிப் பயிற்றுவிக்கும் பணி மிக மேலானது. ஆசிரியர்களே கல்விமுறையின் அச்சாணிகளாவர். இவ்வாறான நல்லாசிரியர்களை ஆசிரியர் கல்லூரிகளும், கல்வியியற் கல்லூரிகளும் உருவாக்கி வருகின்றன.

அவ்வகையில் எமது கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒரு பகுதியில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உருவாகுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். நீண்டதொரு ஆசிரியர் கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட எமது யாழ்ப்பாண மண்ணில் கல்வியியல் கல்லூரி தொடக்கப்பட்டமை ஆக்க பூர்வமான செயற்பாடாகும்.

இந்த வகையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைச் சமூகம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்பத்திற்கும், தொடர்ந்த செயற்பாடுகளுக்கும் ஆதரவு நல்கும் எனக் கூறுவதுடன் பீடாதிபதி, விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. மு. பரஞ்சோதி**
**அதிபர்**
**யா/கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை.**

## ஆல்போல் தழைக்கட்டும்!

கோப்பாய் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் என்ற கோதாவிலும், எமது அமைப்பிற்கும் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்பத்திற்கும் தொடர்பு இருக்கின்றபடியினாலும் கல்லூரியின் ஆரம்ப விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பல துறைகளிலும் வரலாற்றுப் பெருமை பெற்ற கோப்பாய் கிராமத்திலே தான் முதன் முதலில் தமிழ் ஆசிரியர் கலாசாலை அரசினால் தொடங்கி வைக்கப்பட்டது. அதேபோன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கோப்பாயில் ஆரம்பிக்கப்படுவது யாழ்ப்பாணத்தவர் யாவருக்கும் ஒரு வரப் பிரசாதமாகும். இக் கல்வியியற் கல்லூரி கலங்கரை விளக்காய்த் திகழ்ந்து நல்லாசிரியர்களை நூற்றுக்கணக்கில் ஆண்டு தோறும் உருவாக்க வேண்டும் என்று மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

இக்கல்வியியற் கல்லூரியின் முதல் பீடாதிபதி மிகவும் பொருத்தமானவரே. கல்வித்துறையிலும், ஆசிரியர் பயிற்றுவித்தலிலும் மிக நீண்ட அனுபவமும் அறிவாற்றலும் மிக்கவரான திரு. தி.கமலநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பது எமது மகிழ்ச்சியையும், எதிர்பார்ப்பையும் பன்மடங்காக்குகின்றது. இவரின் வழிகாட்டலிலும் முகாமைத்துவத்திலும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பெரும் கல்விப்பணியாற்றும் என்ற நம்பிக்கையோடு என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**வை. தியாகராஜா**
**வைத்திய கலாநிதி**

## வினைத்திறனும் விளைபயனும் பல்கப்பெற்று விருட்சமாக வளர்க

நாட்டின் முன்னோடி வழிகாட்டிகளாக விளங்கும் ஆசிரியர்களுக்கு முன் பயிற்சியையும், ஆற்றலையும், தைரியத்தையும் வழங்கும் சிறப்பு நிறுவனங்களாக தற்போது கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவ்வகையில் யாழ்ப்பாண மண்ணில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் இன்றைய ஆரம்பம் எனக்குப் பெருமகிழ்ச்சியை அளித்திருக்கிறது.

இக்கல்லூரி விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென முயற்சி எடுத்தவர்களில் நானும் ஒருவன் என்ற உரிமையில் இக்கல்லூரி வினைத்திறனும் விளைபயனும் மிக்க கல்வியியல் செயற்பாடுகளில் ஈடுபட்டு பெரு விருட்சமாக வளரவேண்டும். அதற்காகப் பாடுபடும் பீடாதிபதி, விரிவுரையாளர்கள், சமூகநலன்விரும்பிகள், மாணவர்கள் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**சுந்தரம் டிவகலாலா,**
**முன்னாள் செயலாளர்,**
**கல்வி பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை அமைச்சு.**

## காலத்தின்

யாழ்ப்பாண சமூகத்தின் இருப்பிற்கும்
நிறைவான கல்வி இன்றியமையாதது
படும் மனித வளமே ஒரு சமுதாயத்தின்
கல்வியை வழங்கும் மிகப்பெரிய பொறு
ளது. ஆசிரியர்களை உரிய முறையில்
தற்போது கல்வியியற் கல்லூரிகளிடம்
எமது பிரதேசத்தில் யாழ்ப்பாணம் தேசிய
மிகுந்த பயனை விளைவிக்கப்போகிறது.
காலத்தின் பணியாகக் கொண்டு இக்க
பின் உறுப்பினர்களும், பெரியோர்களும்,
பெரிதும் ஆர்வம் காட்டினார்கள். தற்போது
இயங்கும் இக்கல்லூரிக்குத் தனியான
அமைக்கப்படவுள்ளது. அதற்காக நாம்
ருடைய ஒத்துழைப்பையும் அளவிய

**செயலாளர் நாயகம்,**
**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, (ஈ.பி.டி**

## பெரும் நிறுவனமா

ஒரு சமூகத்தின் செம்மையான
பணி மகத்தானது. அப்பணியைச் சிறப்பாக
வழங்கிவரும் ஆசிரிய கலாசாலைகளின்
வதிவிடப் பயிற்சி வாய்ப்பினையும்
சியைக் கருத்தில் கொண்டு ஆற்றல்
நோக்குடன் எமது நாட்டில் நிறுவப்பட
இந்த மிகத் தாமதமாகவே ஆரம்பிக்கப்
பல்வேறு தடைகளையும் தாண்டி இக்
ஆரம்பிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது
தளராது துணிவுடன் தொழிற்படும் பீடாதிபதி
கும் முன்னின்று செயற்பட்ட ஏனைய
ஆசிரிய கலாசாலையின் சார்பாக பாராட்டு
றேன்.

## கற்போரும் கற்
## வளம் பெற

ஒவ்வொரு துறையிலுமுள்ளோர் தத்தம்
லைப் பெருக்குவதுபோல் கற்பித்தல் து
வளர்த்து, ஆற்றலை அதிகரித்தால் மாத்தி
களில் ஈடுபடலாம்.
கற்பித்தல் முயற்சியில் ஈடுபடுவோருக்கு
பல்வேறு வளங்களை வழங்கும் நிறுவன
கல்விக்கூடங்கள் அதிகம் இருந்த போதும்
ஆரம்பம் சற்று தாமதமாக அமைந்துவிட்ட
தாமதமானாலும் இந்நிறுவனம் விரை
கற்போருக்கும் கற்பிப்போருக்கும் எல்லா
வழங்கவேண்டுமென வாழ்த்திடுகின்றேன்.

**கல்வி உயர்கல்வி அமைச்சு,**
**இசுருபாய பத்தரமுல்ல.**

## கோப்பாய்
## செயலரின்

கல்வி பற்றிய நீண்ட சரித்திரத்தை
ஆசிரியர்கள் வணங்கப்பட வேண்டியவர்க
மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் சிறந்த
ஆசிரியர்கள் விளங்குகின்றமையாகும். இ
உருவாக்கும் பணியில் தேசிய கல்விய
பங்காற்றுகின்றன. இவ்வகையில் யாழ்ப்
லூரியின் இன்றைய தொடக்கம் ஒரு புதிய
எனக் கொள்ளலாம்.
எனது பிரதேச செயலர் பிரிவில் இக்
வெற்றி கண்டுள்ளது. இக்கல்லூரியின் பீ
மாகிய திரு. தி.கமலநாதன் அவர்களுக்கும்
மற்றும் அனைவருக்கும் எனது வாழ்த்துக்க

**பிரதேச செயலர், கோப்பாய்.**


**பூபாலசிங்கம் புத்தக நிலையம்**

4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நவீன அழகிய சிங்கப்பூர் நகைகளுக்கு நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம

**சிங்கப்பூர் ஜீவல்லரி**

93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஓடர் நகைகள் குறித்த தவணையில் விரும்பிய டிசைன்களில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.

# ப கல்வியியல் கல்லூரி
# ரச் சிறப்புமலர்
## -05-2000



## லத்தின் பணி

ன் இருப்பிற்கும் எதிர்கால நல்வாழ்வுக்கும் முழு
மையாதது.ஏனெனில் கல்வியினால் உருவாக்கப்
சமுதாயத்தின் பெறுமதி மிகுந்த வளமாகும். இக்
ப்பெரிய பொறுப்பு ஆசிரிய சமூகத்திடமே உள்
ய முறையில் பயிற்றுவித்து வழங்கும் பொறுப்பு
ல்லூரிகளிடமே விடப்பட்டுள்ளது. இவ்வகையில்
பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் தோற்றம்
க்கப்போகிறது.
கொண்டு இக்கல்லூரியை அமைக்க எமது கட்சி
பரியோர்களும், கல்விமான்களும் பொதுமக்களும்
கள். தற்போது கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில்
த் தனியான-பிரமாண்டமான - கட்டடம் ஒன்று
தற்காக நாம் கடுமையாக உழைப்போம். எல்லோ
அவாவியும் நிற்கின்றோம்.

யகம், டக்ளஸ் தேவானந்தா,
கட்சி, (ஈ.பி.டி.பி) பா.உ.

## வனமாக மிளிரட்டும்

மையான வளர்ச்சிப் பாங்கில் ஆசிரியர்களின்
யைச் சிறப்பாக மேற்கொள்வதற்கான பயிற்சியை
சாலைகளின் எண்ணிக்கை அருகி வருவதுடன்
னையும் இழந்துள்ளது. எதிர்கால கல்வி வளர்ச்
டு ஆற்றல் மிக்க ஆசிரியர்களை உருவாக்கும்
ல் நிறுவப்பட்ட தேசிய கல்வியியற் கல்லூரி
வ ஆரம்பிக்கப்படுகிறது.
தாண்டி இப்போதாவது இக்கல்வியியற் கல்லூரி
சிக்குரியது. இம் முயற்சியில் சகல கட்டங்களிலும்
ற்படும் பீடாதிபதி திரு. தி.கமலநாதன் அவர்களிற்
ஏனைய அனைத்துப் பிரிவினருக்கும் பலாலி
ர்பாக பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்

அதிபர்,
பலாலி ஆசிரிய கலாசாலை.

## ரும் கற்பிப்போரும்
## பெற வாழ்த்து

ள்ளோர் தத்தம் அறிவை விருத்தி செய்து ஆற்ற
கற்பித்தல் துறையில் ஈடுபடுவோரும் அறிவை
ரித்தால் மாத்திரமே ஆக்கபூர்வமான செயற்பாடு

ஈடுபடுவோருக்கு தேசிய கல்வியியற் கல்லூரிகள்
ம் நிறுவனமாகத் திகழ்கின்றன. யாழ்ப்பாணத்தில்
ருந்த போதும் தேசியக் கல்வியியற் கல்லூரியின்
அமைந்துவிட்டது.
வனம் விரைவில் விரிந்து, பரந்து, வளர்ந்து
க்கும் எல்லா வளங்களையும், நலன்களையும்
திடுகின்றேன்.

க, எஸ். தில்லைநடராசா
மேலதிக செயலாளர்,

## ப்பாய் பிரதேச
## லரின் செய்தி

சரித்திரத்தைக் கொண்ட எமது சமூகத்தில்
வேண்டியவர்களாகக் கருதப்பட்டனர். ஏனெனில்
ற்கும் சிறந்த அறிவுடன் கூடிய வழிகாட்டிகளாக
மையாகும். இவ்வகையான நல்லாசிரியர்களை
ய கல்வியியற் கல்லூரிகள் தற்போது பெரும்
யில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்
ம் ஒரு புதிய கல்வி அத்தியாயத்தின் ஆரம்பம்

பிரிவில் இக்கல்லூரியை அமைக்கும் முயற்சி
லூரியின் பீடாதிபதியும் கல்விச்சேவையாளரு
வர்களுக்கும் விரிவுரையாளர்கள், மாணவர்கள்
வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
ாய். க. கேதீல்வரன்

## யாழ். ஆயரின் செய்தி

அன்புசால் பெரியோர்களே!

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை தொடங்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தருணத்தில் எனது வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன். இது கல்வியியற்புலத்தில் ஒரு புதிய முன்னெடுப்பு என்பதோடு எமது மக்களின் நீண்டகால எதிர்பார்ப்பும் ஆகும்.

மக்களின் எழுச்சியை - அவர்களின் சமூக வளர்ச்சியை - சிதைத்து மக்களின் இருப்பை அழிக்கவேண்டுமானால் கல்விப்புலத்தில் தலையீட்டை நியாயப்படுத்திய வரலாறு எமக்கு எல்லோருக்கும் தெரியும். கல்வி கற்க முனைந்த மக்களின் பாடப்புத்தகங்களைக் கிழித்த வெறித்தனம் தொடக்கம் பாடப்புத்தகங்களில் புகுத்தப்பட்ட கருத்தியல்கள்வரை இதை அவதானிக்கலாம்.

ஆசிரியர்களின் தரத்தைப் பேணுவதால் கல்வியின் தரத்தைப் பேணலாம். சர்வதேச ரீதியில் கல்வியின் தரம் அதனால் ஏற்படுகின்ற மனித வலுவும் மக்களின் ஆக்க சக்தியும் உயர்நிலையில் அமைந்தபோதிலும் எமது மண்ணில் சுமத்தப்பட்ட அநியாயமான போர் எமது மக்களின் வளர்ச்சியையும் வளத்தையும் அழித்துவிடுகின்றது. நம்பிக்கையோடு யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படும் தேசிய கல்வியியற் கல்லூரியின் வரலாற்று செல்நெறியானது எமது மண்ணில் ஆசிரியர்களின் கல்விப்புலத்தை வளப்படுத்துவதோடு, கல்வியியல் சார்ந்த புதிய ஆய்வுகளையும் நெறிப்படுத்தவேண்டும்.

கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. தி.கமலநாதனையும் அவரோடு இணைந்து பணிபுரியும் விரிவுரையாளர்களையும் உள்ளக அலுவலர்களையும் வாழ்த்துவதோடு, இக்கட்டு, இடையூறுகள் வருங்கால் துணிவுடன் முகங்கொடுத்து நம்பிக்கையோடு வளர இறையாசீரை வேண்டுகின்றேன்.

இறை பணியில்.

பேரருள் திரு. தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ். ஆயர்.

## யாழ்ப்பாணத்தவருக்கு கிடைத்த அரிய சொத்து

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி எமது மண்ணில் இன்று ஆரம்பமாவதையிட்டு ஆசிரியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற் சங்கத்தின் பொதுச் செயலாளர் என்ற வகையில் பெருமிதமடைகின்றேன். இக்கல்லூரி மூலம் உருவாக்கப்படவிருக்கும் வருங்கால ஆசிரிய சமுதாயம் எமது இனத்தோடு மிகவும் இறுக்கமாகப் பிணைந்திருக்கும் கல்விச் செல்வத்தை வளர்ப்பதில் பெரும் பங்காற்றுவார்கள் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும். பல தடைகளை உடைத்தெறிந்து பலரின் முயற்சியினால் இன்று ஆரம்பமாகும் இக்கல்லூரி எமக்குக் கிடைக்கும் பாரிய சொத்தாகும். இதைக் கட்டிக்காத்து பெரும்விருட்சம் போல் வளர வைப்பது ஒவ்வொரு கல்வியாளர்களதும் பெரும் கடமையாகும். இக் கல்லூரி ஆரம்பிக்கப்படுவதற்கு உழைத்தவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் இக்கல்லூரியின் எதிர்காலவளர்ச்சி சகல வளங்களையும் பெற்று மிளிர வேண்டும் என்பது எனது அவாவாகும். இக் கல்லூரியின் முதல் பீடாதிபதி திரு. தி.கமலநாதனின் பரந்த செயற்பாடு இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு நிச்சயம் கைகொடுக்கும்.

'ஒற்றுமையே பலம்'

பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம். த. மகாசிவம்

**மலர் அமைப்பு:**
**ந.பாரதி**
(காரைநகர் செய்தியாளர்)

### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆலோசனைச் சபை

* திரு. ரி. கமலநாதன்
(பீடாதிபதி, யா.தே.க.கல்லூரி)
* அரச அதிபர்
* துணைவேந்தர், *யாழ். பல்கலைக்கழகம்*
* பேராசிரியர் அ. சண்முகதாஸ்
*(பீடாதிபதி, யாழ் பல்கலைக்கழக பட்டப் படிப்புகள் பீடம்)*
* பேராசிரியர் கே. சின்னத்தம்பி
*(தலைவர், யாழ் பல்கலைக்கழகக் கல்வித்துறை)*
* கலாநிதி சபா. ஜெயராஜா
*(சிரேஷ்ட விரிவுரையாளர், தலைவர், இராமநாதன் நுண்கலைத்துறை)*
* கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை
*(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)*
* டாக்டர். எஸ். தியாகராஜா
*(மெடி லைட்ஸ்)*
* கல்விப் பணிப்பாளர், *யாழ் கல்விவலயம்*
* அதிபர், *கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை*
* அதிபர், *பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை*
* உப அதிபர், *கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை*
* திரு. குமாரசாமி
*(ஓய்வுபெற்ற அதிபர்)*
* திரு ந. வித்தியாதரன்
*(இணை ஆசிரியர் - 'உதயன்'-'சஞ்சீவி')*
* திரு. த. பஞ்சலிங்கம்
*(சிரேஷ்ட உதவிச் செயலாளர், தமிழர் ஆசிரியர் சங்கம்)*

## கல்விக் கல்லூரிகளின் ஸ்தாபிதம்

சமூகத்தினதும் தனிமனிதனினதும் மேம்பாட்டுக்குக் கல்வி அடிப்படையானது. கல்வியினால் உண்டாகத்தக்க ஆகக்கூடிய பயனை ஈட்ட நாம் முயற்சிக்கின்றோம். எமக்குக்கிடைத்தவற்றைக் காட்டிலும் கூடுதலான கல்வி வசதிகள் எமது சந்ததியினருக்கு வாய்க்க வேண்டுமென நாம் முயற்சிக்கின்றோம். அம் முயற்சிகளின் பயனாக இன்று யாழ் தேசிய கல்வியியல் கல்லூரி ஆரம்பிக்கப்படுகின்றது. எல்லோரதும் ஒன்றுபட்ட முயற்சிகளின் வலிமையை இது எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கை கல்வி முறையிலும், ஆசிரியர் பயிற்சியிலும் எண்ணிக்கை விருத்தியே (Quantity Development) கவனிக்கப்பட்டது. தரவிருத்திக்கு (Quality Development) முக்கியமளிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நீக்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் ஒன்றாக 1986 ஆம் ஆண்டு 30ஆம் இலக்க கல்விக்கல்லூரிகள் சட்டப்படி இக்கல்லூரிகள் தாபிக்கப்பட்டன.

கல்விக்கல்லூரிகள் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்கள் அல்ல. ஆசிரியர்களாக வரவுள்ளோர்களை பயிற்றுவிக்கும் பணிக்கூற்றையே இவை கொண்டுள்ளன. இரண்டு ஆண்டுகள் கட்டாய வதிவிட வசதிகளுடன் கூடிய நிறுவனப்பயிற்சியையும் ஓராண்டு கட்டுறுப்பயில்வு (Internship) பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாட்டுப் பயிற்சியை மேற்கொள்ளல் குறிப்பிட்ட பாடசாலையில் ஒரு சிரேஷ்ட ஆசிரியர் வழிகாட்டலிலும் விரிவுரையாளர்களின் மதிப்பீட்டுக் கண்காணிப்பு நடவடிக்கைகள் மூலம் இது செயற்படுத்தப்படும்.

ஆசிரியர்களின் முழுமையான ஆளுமை விருத்திக்கும் அறிவு, திறனாற்றல், உளப்பாங்கு சார்பான தொழிற்திறன் விருத்திக்கும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய செறிவான பயிற்சி முறையாக இது அமைகின்றது. இப்பயிற்சி நெறிக்குத் தெரிவாகுவோர் ஜீ.சீ.ஈ உயர்தரத்தில் பல்கலைக்கழக சந்தர்ப்பத்தில் அடுத்தகட்டத்தில் புள்ளிகள் பெற்றவர்களாவர். இவர்கள் 24 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் திருமணமாகாதவர்களாகவும் இருக்க வேண்டும்.

நாட்டின் ஆசிரியத் தேவைகளை ஒட்டியதாக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு தொழில்சார் கல்வி (Professional Education) பாடங்களாக் கல்வியின் அடிப்படைகள், கல்வி வழிகாட்டலும் ஆலோசனைகளும் கல்வி சமூகவியல், கல்வி உளவியல், கற்பித்தல் முறைகள், பாடசாலை ஒழுங்கமைப்பு, கல்வி அளவீடும் கணிப்பீடும் ஆகிய பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

கற்பிக்கப்படவுள்ள பாடப்புலம் சார் (Academic Education) கல்வியாக ஆரம்பக்கல்வி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், உடற்கல்வி, தமிழ், சமூகக்கல்வி, சித்திரம், நடனம், ஓவியம், மனைப்பொருளியல் என்பனவும் பொதுக்கல்வி (General Education) என்ற வகையில் இலங்கையின் கல்வி முறைமை இலங்கையின் சமூகமும் கலாசாரமும் கணனியியல் நூலக தகவல் நுட்பம் ஆகிய பாடங்களும் கற்பிக்கப்படும்.

கல்வியியல் கல்லூரி பாடங்கள் விரிவுரையாளர்களினால் விரிவுரை முறையில் கற்பிக்கப்படமாட்டாது. பல்வேறு பரிமாணங்களில் அனுபவங்கள் செயற்பாடுகள், களப்பயிற்சியின் வாயிலாகவே கற்க வழிகாட்டப்படும்.

1.புத்தாக்கங்கள் (Innovations) 2. புதிய செயற்திட்டங்கள் (New Projects) 3. செயற்பாட்டு ஆய்வுகள் (Action Research) 4. ஆய்வுகள் (Survey) போன்ற பல எடுத்துக்காட்டுக்கள். பிரயோகங்கள் மூலமே தமது பயிற்சியை மேற்கொள்வர்.

கல்வியியல் கல்லூரி முன்சேவை ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டம் மூலம் ஆசிரியர்களுக்கான ஓர் ஒழுக்க நெறிக்கோவை பின்பற்றப்படும். அது:-

(11ஆம் பக்கம் பார்க்க)


அழகிய தங்க நகைகளை செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்
**கலைவாணி நகை மாளிகை**
111 B, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.

ராஜா
**கிறீம் ஹவுஸ்**
36, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.

**ஜெகன் பார்மசி**
462 B, ஆஸ்பத்திரி வீதி,

சகலவிதமான பழைய, புதிய புத்தகங்களையும் பெற்றுக்கொள்ள
**பாலன் புத்தக நிலையம்**
87, சிவன்வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**
73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**லிங்கம் ரேட் சென்ரர்**
78, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**எடிசன் அக்கடமி**
411, K.K.S.வீதி ,யாழ்ப்பாணம்.
18, வைமன் வீதி, நல்லூர்.
தரம் 6 முதல் O/L வரை கற்பிக்கப்படுகிறது.

**மதுபாரத் வித்தியா நிலையம்**
93/21. இந்து மகளிர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தரம் 6 முதல் A/L கலை, வர்த்தக வகுப்புகளும் நடைபெறுகின்றன.

**இந்திரன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
101, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

சுருக்குகேற், கிறில் மற்றும் சகல விதமான இரும்பு வேலைகளுக்கும்
**பிள்ளையார்வெல்டிங் இரும்புத் தொழிலகம்.**
483/1,K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

T.V, டெக், றேடியோ, கைக்கடிகாரம், சுவர் மணிக்கூடு, பிலிம்றோல் மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் பெற்றுக் கொள்ள
**சிறி மாதவன்**
97, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நவீன அழகிய தங்க நகைகளுக்கு பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்
**லலிதா ஜுவல்லறி**
213B, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
22 கரட் தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

# சமாதானத்தை ஏற்படுத்துவதே இன்றையதினத்தில்பிரதானசவால்

## ஜனாதிபதி மே தினச் செய்தி

கொழும்பு, மே 2

''யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து துரிதமாகச் சமாதானத்தை நிலைநாட்டுவதே இன்றைய தினத்தின் பிரதான சவாலாகும்'' என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மே தினத்தை யொட்டி அவர் விடுத்துள்ள செய்தியிலேயே இப்படிக் கூறியுள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ;

வடபகுதியில் வன்முறைக்குக் காரணமாக அமைந்திருக்கும் பாசிஸ சவால்களை மட்டுமல்லாது, தெற்கே கடும்போக்குவாதிகளின் இனவாத சிந்தனையின் தன்மையையும் பாசிஸ வாதத்தையும் ஒழித்துக் கட்டுவதில் தொழிலாளர் வர்க்கம் இணைந்து பணியாற்ற காலம் கனிந்துள்ளது.

இன்றையதினத்தின் பிரதான சவால் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து துரிதமாகச் சமாதானத்தை நிலைநாட்டுவதாகும்.

இந்தப் பணியை நிறைவேற்றுவதில் தொழிலாளர் கரங்களில் பெரும் பொறுப்புக் காணப்படுகின்றது.

அரசாங்க ஊழியர் மாத்திரம் அன்றி அனைத்துத்தொழிலாளரின் நலன்களைப் பேணும் பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. இந்த விடயத்தில் அரசாங்கம் தனது முக்கிய கவனத்தைச் செலுத்தியிருக்கின்றது.

நாட்டின் ஐக்கியதுக்கான ஒரே பலம் தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமையே ஆகும்.

21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் உலகில் மாறிவரும் சமூக, பொருளாதார தன்மைகளைப் புரிந்து கொள்வதும்' அதற்கு ஏற்ற வகையில் தமது நோக்கங்களைச் சரிசெய்து கொள்வதும் மற்றுமொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

உலக மயமாக்கல் பொருளாதார யுகத்தின் அபிவிருத்தியில் வெற்றிகொள்ள வேண்டுமானால் கருத்து ரீதியான மாற்றமே அதற்கு வழிவகுக்கும். அந்த வகையில் தமது பொறுப்புக்களை நன்றாக அறிந்து கொண்ட இலங்கையின் தொழிலாளவர்க்கத்தினர், தமது வெற்றிக்காக கடந்த ஜனாதிபதி தேர்தலில் உயர்ந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றியமை அதனைத் தெளிவுபடுத்துகின்றது. அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்ளும் வாய்ப்பாக இன்றைய தினத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடிகின்றது.

நாட்டின் சகல சமூகங்களினதும் அடையாளங்களைப் புரிந்து கொண்டு கடும்போக்குச் சக்திகளைத் தோல்வி அடையச் செய்து சுபீட்சம் மிக்க நாட்டைக் கட்டி எழுப்புவதற்காக மனிதாபிமானத்துடன் ஐக்கியப்பட வேண்டும்.

இப்படித் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி.

(இ-3)

# கடற்படையினர் வசம் இருந்த மைதானம்மீண்டும்பாடசாலைக்கு

யாழ்ப்பாணம், மே 2

கடற்படையினர் வசமிருக்கும் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் மகாவித்தியாலய விளையாட்டு மைதானம் மீண்டும் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

ஈ. பி. டி. பி யின் வட்டுக்கோட்டை அமைப்பாளரும் வலி.மேற்கு பிரதேசசபைத் தலைவருமான என். திரிலோகநாதன் மேற்படி விளையாட்டு மைதானம் தொடர்பாக கடற்படை அதிகாரி லெப். எம்.ஏ.என் சந்திரசிறியுடன் நடத்திய பேச்சுக்களையடுத்தே இவ்விளையாட்டு மைதானம் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பாடசாலையின் அதிபர் கடற்படை முகாமுக்கு அழைக்கப்பட்டு இந்த விடயம் தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது.

(இ-க-ஒ)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 2

சுழிபுரம் — பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஆலய மகோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன.

எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும். (க-28)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 2

பருத்தித்துறை ஆத்தியடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் இடம் பெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-15)

★ ★ ★

சுதுமலை, மே 2

'ஆனைக்கோட்டை அருள் மிகு கரப்பிரான் பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமைகாலையும் தீர்த்தோற்சவம் நாளையும் நடைபெறும்.

(க-139)

# அச்சுவேலியில் இன்று நடமாடும் சேவை

வலி. கிழக்கு, மே 2

வலி. கிழக்குப் பிரதேச செயலகத்தின் இரண்டாவது நடமாடும் சேவை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வலி. கிழக்குப் பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தில் நடைபெறும்.

வளலாய், இடைக்காடு, தம்பாலை, கதிரிப்பாய், பத்தமேனி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி மேற்கு, நவக்கிரி, ஆவரங்கால் மேற்கு, ஆவரங்கால் கிழக்கு,புத்தூர்வடக்கு, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, வாதரவத்தை ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பங்குபற்றலாம்.

இந்த நடமாடும் சேவையின் போது நிவாரண முத்திரை, பொதுசன மாதாந்த உதவிப்பணம், காணி சம்பந்தமான விடயங்கள், கிராம அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் கவனிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ - 180)

# ஆனையிறவிலிருந்துஓமந்தைக்கு பஸ்சேவை நடத்த புலிகள்திட்டம்

கொழும்பு, மே 2

ஆனையிறவில் இருந்து வன்னிப் பெருநிலப்பரப்பின் ஊடாக ஓமந்தைக்கு பயணிகள் பஸ் சேவை ஒன்றை நடத்த புலிகளால் ஒழுங்குகள் செய்யப்படுவதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பிரதேசத்தில் உள்ள மிதிவெடிகள்,கண்ணிவெடிகள் ஆகியவற்றை அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்றும் —

விரைவில் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படும் என்றும் — அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் ஆரம்பித்த 'ஓயாத அலைகள் 3' நடவடிக்கையின் போது ஓமந்தை முதல் ஆனையிறவு வரையான ஏ 9 பாதையை விடுதலைப் புலிகள் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ-3-7)

# இடம் பெயர்ந்தோரில் 2 ஆயிரத்து 163 குடும்பங்களே இதுவரை பதிவு செய்யப்பட்டன

யாழ்ப்பாணம், மே 2

பச்சிலைப்பள்ளி (பளை), வடமராட்சி கிழக்கு பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களில் 2 ஆயிரத்து 163 குடும்பங்கள் மட்டுமே தம்மைப்பதிவு செய்துள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாகர் கோயிலுக்கு வடக்கேயுள்ள பிரதேசங்களிலிருந்து இன்னமும் பல குடும்பங்கள் இடம் பெயராமலிருப்பதாகவும்—

இதே வேளை வேறு இடங்களில் இருந்து இடம்பெயர்ந்த 686குடும்பங்கள் அம்பன்,குடத்தனை, பொற்பதி ஆகியபகுதிகளில் வசிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# கொழும்பில் ஞாயிறன்று ஆன்மீகப் பெரு விழா

## பலர் பட்டமளித்துக் கௌரவிப்பு

கொழும்பு, மே 2

இலங்கை இந்துமத குருபீடாதிபதி அருள் ஜோதி சாம்பசிவ சிவாச்சாரியாரின் மூன்றாவது ஆண்டு ஞாபகார்த்த ஆன்மீகப பெருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய சுப்பம்மாள் கல்யாண மண்டபத்தில் நவாலியூர் பிரதிஷ்டா சிரோமணி சாமி விஸ்வநாதக் குருக்களின் அருளாசியுடன் நடைபெறவுள்ளது.

இந்த ஆன்மீகப் பெருவிழாவில் மாவை ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள், நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், இணுவில் சாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தானுமஹாதேவக்குருக்கள், நோர்வூட் சிவஸ்ரீ பிறேமகாந்தக் குருக்கள், மட்டுவில் சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள், கொட்டாஞ்சேனை சிவஸ்ரீ ந. சோமாஸ்கந்தக் குருக்கள், அச்சுவேலி சிவஸ்ரீ வை. கனகசபாபதிக் குருக்கள், சம்மாங்கோடார் கதிரேசன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ ப. பாலசுப்பிரமணியக் குருக்கள், திருக்கேதீஸ்வர ஆலய முன்னாள் குரு சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் ஆகிய ஒன்பது சிவாச்சாரியார்களும் பட்டமளித்துப் பொன்னாடை போர்த்தி இந்துமத குரு பீடாதிபதியின் ஞாபகார்த்த விருது வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அதே வேளை —

யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப கோபாலகிருஷ்ண ஐயர், மயூரபதி அம்பாள் ஆலய தர்மகர்த்தா பொன். வல்லிபுரம், கொட்டாஞ்சேனை விநாயகர் ஆலய தர்மகர்த்தா வி. ரி. வி ஈஸ்வரன், வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத் தலைவர் எஸ். பி. சாமி, சங்கீத ஆசிரியர் மாணிக்கவாசகம் ஆசிரியை திருமதி லக்ஷ்மி பரமேஸ்வர சர்மா, ஜீ. சண்முகானந்தம், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஆசிரியர் அருணாசலம், சங்கீத ஆசிரியை திருமதி மாணிக்கவல்லி சோதிலிங்கம், அதிபர் த. சுந்தரலிங்கம், தவில் வித்துவான் கலைமாமணி கே. கணேசபிள்ளை, நாதஸ்வர வித்துவான் அளவெட்டி சிதம்பரநாதன், நாதஸ்வர வித்துவான் பஞ்சமூர்த்தி, தவில் வித்துவான் இணுவில் புண்ணியமூர்த்தி ஆகியோர் பொன்னாடை போர்த்தி இந்துமத குரு பீடாதிபதியின் ஞாபகார்த்தக் கேடயம் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

அன்றைய தினம் இந்த விழா ஞாபகார்த்தமாக 'அருள் ஜோதி' சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. (இ-க)

# ஓடுகளைத் திருடிய மூவர் விழிப்புக்குழுவிடம் மாட்டினர்

## சில்லாலையில் சம்பவம்

சண்டிலிப்பாய் மே 2

சில்லாலைக் கிராமத்தில் ஆள்கள் இல்லாத வீடு ஒன்றின் கூரை ஓடுகளை பகல் வேளையில் திருடிச் சென்ற மூன்று பேர் அப்பகுதியில் கண்காணிப்பில் இருந்த விழிப்புக் குழுவிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

கடந்த வாரம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் திருடப்பட்ட ஓடுகள் இளவாலையிலுள்ள பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

ஓடு திருடியவர்களின் மீது பொலீஸார் மேல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை — முன் அனுமதியின்றி மரங்களை தறித்து ''லான்ட் மாஸ்டர்'' ஒன்றில் ஏற்றிக்கொண்டு வந்த சிலரும் இந்த விழிப்புக்குழுவினரிடம் அகப்பட்டுக் கொண்டதாகவும் —

இந்த விறகுகளும் பச்சை மரங்களும் சில்லாலை கிராம அலுவலரிடம் விழிப்புக் குழுவினரால் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் —தெரிவிக்கப்பட்டது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் அனுமதியுடன் செயற்பட்டு வரும் இந்த விழிப்புக்குழு இரவில் ஊரடங்குச் சட்ட நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளை இப் பகுதியில் மேற்கொண்டு வருகின்றது.

சில்லாலைப் பகுதியில் பெருமளவு திருட்டுகள் இடம் பெற்று வருவதை அடுத்து இந்த விழிப்புக்குழு அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(இ-135)

# போலி ஆவணம் சமர்ப்பித்து கொள்கலன்கள் அகற்றப்பட்டது தொடர்பாக ஆராய விசேடகுழு

கொழும்பு, மே 2

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து போலி ஆவணங்களைச்சமர்ப்பித்து 43 கொள்கலன்களை அகற்றிய சம்பவம் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி விசேட குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து ஆராயும் குழுவில் நிதி அமைச்சு, சுங்கத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகளை நடத்தி ஒரு வாரகாலத்துக்குள் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி குழுவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

துறைமுக அபிவிருத்திப் பதில் அமைச்சர் விஜயரணதுங்க இந்த விடயம் குறித்து சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதைத் தொடர்ந்தே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் — சம்பவத்தில் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் துறைமுக அதிகார சபையின் நான்கு அதிகாரிகள் சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

(இ—க)

# ஜனன தினமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், மே 2

நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூல் நிலையம் நடத்தும் சிவசங்கர பண்டிதரின் ஜனன தினமும் நூல் வெளியீடும் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நீர்வேலி கரந்தன் வீதியில் உள்ள நூல்நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கவிஞர் கலாநிதி இ முருகையன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை ஆசிரிய மணி அ. பஞ்சாட்சரமும் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் ப. கணேசலிங்கமும் மதிப்பீட்டுரையை சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் வி. சிவசாமியும் நிகழ்த்துவர்.

ஆசியுரையை நீர்வேலியைச் சேர்ந்த அந்தணப் பெருமக்கள் நிகழ்த்துவர்.

(இ-7-110-69-15)

### அரசின் நிதிநெருக்கடி நிலை மோசம்

# நாளாந்த செலவுகளுக்கே திறைசேரி திண்டாடுகிறது

கொழும்பு, மே 2

தொடரும் யுத்தம் காரணமாக அரசின் நாளாந்த செலவுகளுக்குக் கூட நிதி இல்லாது திறைசேரி பெரும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக 'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசாங்க ஊழியரின் சம்பளங்களை வழங்குவதற்கு மட்டும் திறைசேரி இதுவரையும் அரச வங்கிகளிடமிருந்து 1300 கோடி ரூபாக்களுக்கு மேல் கடன் பெற்றுள்ளதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

படையினருக்கு உணவுப் பொருள்களை வழங்குவதற்குக் கூட நிதியில்லாத காரணத்தினால் நிலுவைகளைச் செலுத்தமுடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முப்படைகளுக்கு நீண்டகாலமாக உணவுப் பொருள்கள் வழங்கி வந்த அரச திணைக்களம் ஒன்று நிலுவைகளை அறவிடுவதற்கு அதி உச்ச முயற்சிகளை மேற்கொண்டபோதும் அரசிடம் நிதியில்லாத காரணத்தினால் அதனைப்பெறமுடியவில்லை.

அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் அதிகரிக்கப்பட்ட சப்பளத்தின் நிலுவைகள் வழங்கப்பட்டுள்ள போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பள நிலுவைகளை முற்றாக வழங்க முடியாத நிலை உருவாகியுள்ளதால் கொடுப்பனவு பிற்போடப்பட்டுள்ளது— என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| உதயம் | மறைவு |
|---|---|
| 1 | 2 |
| — | — |
| 6 | 4 |
| — | — |
| 1959 | 2000 |

### திருமதி தெய்வேந்திரன் சத்தியகலா

திதி: 2-5-2000

எமது குடும்ப அன்புத்தெய்வத்தின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், சகல நிகழ்வுகளிலும் துணை புரிந்தோர் அனைவருக்கும் எமது அன்பான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்

கணவர்: பு. தெய்வேந்திரன் (இ. மி. ச.)

பிள்ளைகள்: றாபா, காயத்திரி, பிரசாத், நளினிகாந், சத்தியேந்திரா

மற்றும்

பொ. அற்புதஜெயம் (கிராம அலுவலர்).

கிளிகுடும்பம் (மீசாலை)

கச்சேரியடி,
யாழ்ப்பாணம். (சி/12012)

## 31 ஆம் நாள் நினைவு நன்றித்துதி ஆராதனை



| பூலோகம் | பரலோகம் |
|---|---|
| 29 | 2 |
| — | — |
| 1 | 4 |
| — | — |
| 1969 | 2000 |

### சின்னையா ஜோச்காண்டீபன்

(கவிஞன் - தரவையூரான்)

எமது வாழ்விலும் சுகத்திலும், துக்கத்திலும் ஒருவராய் வாழ்ந்து வந்த எமது அன்பு மகளின் இறுதி அடக்க ஆராதனையில் பங்கு கொண்டு எல்லா விதத்திலும் எமக்கு ஒத்தாசையாய் இருந்த யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை மனநிறைவுடன் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று (02-05-2000) செவ்வாய்க் கிழமை வீட்டில் நடைபெறும் நினைவு நன்றித்துதி ஆராதனையிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காக மன்றாடுமாறு வேண்டுகின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்
தாய், சகோதரர்கள்

சேர்ச் லேன்,
தாவடி, கொக்குவில். (75904)

## சமுர்த்தி அலுவலகம் திறப்பு

காரைநகர் மே 2

திவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் முதலாவது சமுர்த்தி வலய அலுவலகம் காரைநகரில் கடந்த வியாழக் கிழமை ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜாவினால் திறந்து வைக்கப்பட்டது.

வலயம் ஒன்றின் சமுர்த்தி முகாமையாளர் செல்வி ந. மேரி விஜயநந்தினி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் உட்பட பலர்கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (ஐ-73)

## பாடசாலை மீண்டும் இயங்குகிறது

அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை கடந்த வியாழன் முதல் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

வடமராட்சி கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து இந்தப் பாடசாலையில் தங்கியிருந்த மக்கள் கடந்த புதன் கிழமை அங்கிருந்து வெளியேறித் தமது உறவினர்களின் வீடுகளுக்கும் சென்றதைத் தொடர்ந்து மேற்படி பாடசாலை இயங்க ஆரம்பித்துள்ளது. (க-109)

## மின்சாரம் கிடைக்கவில்லை

நெல்லியடி, மே 2

பொலிகண்டி கிழக்கு ஒதியடி தெருப் பகுதிக்கு மின் கம்பங்கள் நடப்பட்டு சுமார் ஒரு வருடகாலமாகியும் இதுவரை மின்சார வயர்கள் இணைக்கப்படவில்லை. இதனால் இப்பகுதியிலுள்ளவர்களுக்கு இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை. (க-6-109)

## சமூகக் கல்வி மன்றம் அமைப்பு

திருநெல்வேலி, மே 2

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் சமூகக் கல்வி மன்றம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வர்த்தக மன்றமும் இங்கு விரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் அ. ஈஸ்வரநாதன் தெரிவித்தார். [ஐ-க-135]

## பளை, மருதங்கேணி, சாவகச்சேரிப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களின் கவனத்துக்கு

பளை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலிருந்தும், சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் கடந்த மார்கழி மற்று சித்திரை மாதங்களில் நடைபெற்ற அசம்பாவிதங்களினால் தங்கள் சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம் பெயர்ந்து, அதே பிரிவுகளில் அல்லது ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள முகாம்களிலும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் தற்காலிகமாக வதியும் குடும்பத்தவர்களுக்கு நிவாரணங்கள் உரியவாறு ஒழுங்குபடுத்தி வழங்குவதற்கு ''நிவாரண உதவிப் பதிவு அட்டை'' வழங்கப்படவுள்ளது.


எனவே இடம்பெயர்ந்து வாழும் குடும்பத்தின் குடும்பத் தலைவன் / தலைவி தங்களின் நிரந்தர வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் தவறாது மே மாதம் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தற்போது இடம்பெயர்ந்து வதியும் பிரதேச செயலர் அலுவலகம் சென்று, மேற்படி நிவாரண அட்டையினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இத்தினத்தில் இந்த நிவாரண அட்டைகளைப் பெறத்தவறின் பின்னர் அட்டைகள் வழங்கப்படமாட்டாது என்பதனை வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

(சி/11995)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 | 24 |
| — | — |
| 12 | 04 |
| — | — |
| 1944 | 1998 |

### V. S. மகேந்திரன்

திதி: திரயோதசி 02-05-2000

அன்பினைத் தருவதில் அப்பாவாய்
அறிவினைத் தருவதில் ஆசானாய்
இன்பத்தைத் தருவதில் இறையோனாய்
இணைந்திருந்தீர்களே எம்மோடு!
இன்று துன்பத்தைத் தரவும் மனம்நினைந்து
கலந்து விட்டீர்களே காற்றோடு!

ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்.

14/7, ஆடியம்பிட்டி ஒழுங்கை,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி. (12014)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 05-06-1919

விண்ணில்: 13-05-1999

### திருமதி நாகமணி இராசம்மா

திதி: 02-05-2000

எம்மை விடுத்துப் பெரும் பயணம் ஏன் தொடர்ந்தாய்?
உன் கண்ணொளியின் கதகதப்பில் வளர்ந்தோம்!
எம் கண்ணெல்லாம் ஏன் குளமாய் மாற்றிவிட்டாய்?
நிழல் நீதான் என்றிருந்தோம்; நீ கடல் நிலத்துக்குள்
நிழல் தேடப்போய் விட்டாய் நியாயந்தானா?
ஓராண்டு நீங்கியது எழுந்து வா
எம் பதிக்கு!

மகள், மகன்மார், மருமகன்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

'இராசமகால்',
கலைவாணி வீதி,
சித்தன்கேணி. (75834)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய National J II (ஜப்பான் தயாரிப்பு) டெக் விற்பனைக்குண்டு. 396, (கைலாய பிள்ளையார் கோயிலடி) முன்னையஉதயன் பணிமனை ஒழுங்கை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (75911)

## திருமண சேவை

எல்லா மதத்திலும் மணமக்கள் உண்டு. பழைய தொடர்பு உள்ளவர்கள். தொடர்பு கொள்ளவும் துர்க்கா திருமண சேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (75913)

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 2

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி வலய மாநாட்டு மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசா தலைமையில் நடைபெறும்.

அதிபர்கள் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது. (க-133)

## 123 பொதிகளில் தபால்கள் வந்தன

வெள்ளியன்று காங்கேசன் வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 123 தபாற்பொதிகள் எடுத்துவரப் பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 42 தபாற் பொதிகள் அனுப்பி வைக்கப் பட்டதாகத் தபாற் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

## இராணுவ ஆஸ்பத்திரிக்கு புதிய பணிப்பாளர்

கொழும்பு இராணுவ வைத்தியசாலைக்குப் புதிய பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவ வைத்தியசாலையின் பணிப்பாளராக இருந்த கேணல் டி. சி. டி சில்வா வைத்தியசாலையில் இருந்து மருந்துப் பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டுக்களை அடுத்து கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து பிரிகேடியர் டட்லி பெரேரா புதிய பணிப்பாளராகப் பதவி ஏற்றுள்ளார். (ஐ-6)

## பொருள்களை மீட்பதற்கு அனுமதியில்லை

பளைப் பிரதேச சபையின் பொதுநூல் நிலையம், இத்தாவிலில் இயங்கிவந்த பொது நூல்நிலையக் கிளை ஆகியவற்றில் இருந்த இலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான புத்தகங்கள் பளை, முகமாலை ஆகிய இடங்களில் இயங்கிய ஆயுள்வேத வைத்தியசாலைகளின் மருந்துகள் உட்பட அனைத்துப் பொருள்களும் மீட்க முடியாத நிலையில் உள்ளன.

அண்மையில் பிரதேச சபை அலுவலக செயலாளர் கு. ப. பாலச்சந்திரன், தலைமை அலுவலக பிரதம எழுதுநர் சி. சிவப்பிரகாசம் ஆகியோர் அங்கு சென்றபோது அலுவலகத்தின் முக்கியமான ஆவணங்கள், கோவைகள் மட்டும் எடுத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அவைகள் எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-117)

# அந்தியேட்டி அழைப்பு

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 03 |
| — | — |
| 05 | 04 |
| — | — |
| 1933 | 2000 |



## திருமதி கனகம்மா துரைராசா

(கரவெட்டி)

நாளை 03 – 05 – 2000 நடைபெறும் எமது குடும்பத்தாரின் அச்சாணியாக விளங்கிய எமது குலதெய்வம் திருமதி கனகம்மா துரைராசா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

து. அருந்தவசீலன்
(மகன்)

விக்னேஸ்வரா வீதி,
நெல்லியடி,
கரவெட்டி. (சி/12017)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா குணசேகரன்

(உரிமையாளர் — குணம் ஆட்ஸ்)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணசேகரன் (உரிமையாளர்— குணம் ஆட்ஸ்) 30 – 04 – 2000 ஞாயிற்றுக்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா — இராசம்மா ஆகியோரின் அன்பு மகனும், ஞானசேகரன், நிர்மலா, மேகலா, அஞ்சலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சண்முகவடிவேல், நவமணி ஆகியோரின் அன்புமிகு மைத்துனரும், மயூரி, மதுஷாவின் அன்புச் சித்தப்பாவும், சோபிகா, வினோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், மாணிக்கராஜாவின் பாசமிகு மருமகனும், திசவீரசிங்கம், பாக்கியம், இராமகிருஷ்ணன் குஞ்சுமணி ஆகியோரின் பெறாமகனும், நிரோசன், ரதிஷன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும், சண்டிலிப்பாய் கார்த்திகேசு — மகேஸ்வரியின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02 – 05 - 2000) செவ்வாய்க்கிழமை காலை பத்து மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்
க. அஞ்சலா
(தங்கை)

கோப்பாய் மத்தி,
கோப்பாய். (75912)

## குட்டித்தம்பி தம்பிராசா

வதிரி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி தம்பிராசா நேற்று (01-05-2000) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பல்கலைப் பண்டிதர் கிருஷ்ண பிள்ளை–பூரணம் தம்பதிகளின் மருமகனும் தேவாபரணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தேவகலா மற்றும் தேவமோகன் (கொழும்பு), தேவறஞ்சினி (ஆசிரியை), தேவமதி (ஆசிரியை), தேவராஜன் (ஆதாரவைத்தியசாலை, மந்திகை), தேவானந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும் திரவியராஜா (யாழ். போதனா வைத்தியசாலை, தாதிய உத்தியோகத்தர்), கிருபைநேசகுமாரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிவேதினி, நிதுஷன், நிகாஷன், ஆர்த்திக் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கு. சின்னத்தம்பி, நடனம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (01-05-2000) அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஆலங்கட்டைப் பொது மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. திரவியராஜா

'தேவமஹால்',
வதிரி. (75910)

பளை, மருதங்கேணி பிரதேசங்களிலிருந்து

# இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிவாரண உதவி பதிவு அட்டைகள்

யாழ்ப்பாணம், மே 2

பளை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலும் அண்மையில் ஏற்பட்ட போர்ச்சூழ்நிலையால் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கி உள்ள குடும்பங்களுக்கு நிவாரண உதவிப்பதிவு அட்டைகள்வழங்கப்படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து முகாம்கள் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்பவர்களை, அவர்கள் தற்பொழுது வசிக்கும் பிரதேச செயலர் பிரிவுகளில் இன்று செவ்வாய்க்கிழமை வழங்கப்படும் நிவாரண உதவிப்பதிவு அட்டைகளை நேரில் சென்று பெற்றுக்கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கோரி உள்ளார். (இ-6-5)

## நிவாரணம் விநியோகம்

தென்மராட்சி, மே 2

தென்மராட்சி பிரதேசத்தின் எழுதுமட்டுவாழ் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து ஏனைய இடங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கான ஒரு வார உலர் உணவு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் ஒட்டுவெளி, கரம்பகம் ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான நிவாரணம் விரைவில் வழங்க நடவடிக்கைகள்மேற் கொள்ளப்பட்டு வருவதாக பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (க-117)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 2

மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரியின் வாகீசர் மண்டபத்தில் நடைபெறும். (க—4)

## கொக்குவிலில் நடமாடும் சேவை

நல்லூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டிலான இரண்டாவது நடமாடும் சேவை எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 9.30மணிமுதல் கொக்குவில் மேற்கு மஞ்சவனப் பகுதியில் இடம்பெறவுள்ளது.

இருபத்தைந்துக்கு மேற்பட்ட திணைக்களங்களைச் சேர்ந்த அதிகாரிகள் இந்தச் சேவையில் பங்கு பற்றி மக்கள் குறைகளுக்கு ஏற்ற தீர்வுகளை வழங்குவர்.

இந்தப் பிரதேச செயலகத்தின் முதலாவது இடம்பெயர் சேவை அரியாலையில் அண்மையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ – 86 - 3)

# கண்ணீர் அஞ்சலி

புத்தூர் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவரும் கலைமதி சனசமூக நிலையத்தின் அங்கத்தவருமான

## பொன்னன் செல்வரத்தினம் (இரத்தினம்)

அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு நாம் அனைவரும் துயரடைந்துள்ளோம். அன்னாரது மறைவையிட்டு துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிராம அபிவிருத்திச் சங்கம்,
கலைமதி சனசமூக நிலையம்,
விளையாட்டுக் கழகம்,
மாதர் அபிவிருத்திச் சங்கம்,
நிர்வாகிகள், பொது மக்கள்.

புத்தூர் மேற்கு, புத்தூர். (75914)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 27 | 25 |
| — | — |
| 08 | 04 |
| — | — |
| 1925 | 1998 |



திருமதி

## துரைசாமி இராசமணி

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

**திதி: 02–05–2000**

ஆண்டு இரண்டு சென்றாலும்
ஆறாது எம் துயரம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இ. பாக்கியநாதன்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (75909)

## ஆனையிறவு வெற்றியை அடுத்து

# வெளிநாட்டுத் தமிழர்களிடம் இருந்து புலிகளுக்குப் பெரும் நிதி குவிகிறது!

கொழும்பு,மே2

ஆனையிறவு வெற்றியை அடுத்து வெளிநாடுகளில் உள்ள ஈழத் தமிழர்களிடமிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு பெரும் தொகையான நிதி குவிந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

நோர்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற ஸ்கண்டிநேவிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் 'ஆனையிறவுப் பெரு வெற்றி விழாக்கள்' நடைபெற்று வருகின்றன.


அந்த நிகழ்ச்சிகளில் வைத்தே விடுதலைப் புலிகளுக்கு பெரும் தொகையான நிதி வாரி வழங்கப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய வெற்றி விழாக்களில் பங்கு பற்றுவதற்காக தமிழக இசைக்கலைஞர்கள் பலர் கனடா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு அழைக்கப்பட்டுவருகின்றனர்.

இத்தகைய வெற்றி விழா ஒன்றில் நிதி வழங்க முன்வந்த ஈழத் தமிழர் ஒருவர் தம்முடன் போதியளவு நிதி எடுத்து வராததால் தாம் கொண்டு வந்த புத்தம் புதிய பி.எம்.டபிள்யூ காரை அப்படியே அன்பளிப்பாக வழங்கினார்.

வெற்றிவிழா இசை நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வந்திருந்த பெண்களில் பலர் தங்களின் தங்க நகைகளை அப்படியே கழற்றி அன்பளிப்பாக வழங்கியதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்தது.

(ஐ-உ)



ஈ.பி.டி.பி. அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேதினப் பேரணி நேற்று தீவகத்தில் நடைபெற்றது. வேலணை ஊர்காவற்றுறை பகுதியில் நடத்தப்பட்ட பேரணியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

*படம்: ந.பாரதி (காரைநகர் செய்தியாளர்)*

# மீண்டும் மண்எண்ணெயில் இயங்கும் வாகனங்கள்

யாழ்ப்பாணம்,மே2

பெற்றோலுக்குத் தட்டுப்பாடும் விலை உயர்வும் ஏற்பட்டிருப்பதை அடுத்து குடாநாட்டில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் மீண்டும் மண்எண்ணெய் மூலம் இயக்கப்படுகின்றன.

மோட்டார் சைக்கிள்களை பலரும் மண்எண்ணெய்க்கு மாற்றி பயன்படுத்தி வருவதைக் காணமுடிகிறது.

90 களின் நடுப்பகுதியில் குடாநாட்டில் வாகனங்களை இயக்குதற்கான பிரதான எரிபொருளாக மண்எண்ணெயே பயன்படுத்தப்பட்டு வந்தது தெரிந்ததே. (ஐ-139)

## மெய்வல்லுநர் இறுதி நாள் போட்டி

சுழிபுரம்,மே2

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-4-28)

## சமுர்த்தி செயலணி அமைப்பு

வடமராட்சி,மே2

புலோப்பளைப் பகுதியில் சமுர்த்திச் செயலணிகள் இன்று செவ்வாய்கிழமை அமைக்கப்படவுள்ளன.

புலோப்பளை வடமேற்கு, புலோலி கிழக்கு, புலோலி தெற்கு, மந்திகை, வல்லிபுரம் ஆகிய ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பகுதிகளுக்கான செயலணிகள் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை மண்டபத்தில் வைத்து அமைக்கப்படும்.

செயலணிகள் அமைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி கலந்து கொள்வார். (ஐ-173)

(யாழ். கல்விக் கல்லூரி ஆரம்ப விழாசிறப்புமலர் தொடர்ச்சி)

## வாழ்த்து

பூமருவும் யாழ்ப்பாண நகரில் என்றும்
புகழ் பூத்த கோவையம்பதியில் மேவும்
தேமதுரக் கல்விவளர் யாழ்ப்பாணத்துத்
தேசிய கல்வியியற் கல்லூரித்தாய்
நாமகளின் அருள் பெற்றே நயந்தே கல்வி
நளினகலை ஓங்கிடவே வளர்த்தே அன்னை
க்ஷேமமுடன் பல்லாண்டு வாழ்க என்றே
செல்வி கலை வாணிபதம் போற்றி செய்வாம்.

பைந்தமிழர் பண்பாடு பண்பினோடு
பசுங்கலைகள் பார்போற்ற அதிநவீன
விந்தை மிகு விஞ்ஞானக் கல்வியோடு
விளங்கிடும் மெஞ்ஞான நெறியுமூட்டிச்
சிந்தனை சேர் உளவியலும் இறையியலும்
சொரியுதே சியக்கல்லூரி வாழி,
வந்தனை செய் பீடாதிபதியும் வாழி,
வளமார்ந்த விரிவுரையாளர் வாழி!

தெய்வீக பக்தியுடன் குருவின் பக்தி
தேசபக்தியுடனே ஸமூகசேவை
செய்வோருக்கானவுளப் பயிற்சி நல்கிச்
செழுங்கல்வி கலைகளும் ஊட்டி வைத்தே
மெய்யான கல்வி கலை வளர்க்கும் சேவை
மேதினியில் புரியும்கல்விக்கல்லூரி
உய்வோருக்குதவிடும் கல்வி
தந்தே உயர்ந்தோங்கிப் பல்லாண்டு வாழி வாழி!

கல்வியிலே மாணவரும் கருத்துமொன்றிக்
கசடறக் கற்பவை கற்க வேணும்
பல்விதச் சாதனைகள் புரிந்தே கல்வி
பாரினிலே ஓங்கிடச் செய்யவேணும்
கல்வியாளர் நிறைந்த சோலையாகக்
கவினிலங்கைத் தேசியமும் திகழவேணும்
வல்விளையாட்டுக்களும் புரிய வேணும்
வாழிதே சியக்கல்வி யியற்கல்லூரி.

அம்புயத்து அண்ணலவன் அருளும் வாழி
ஆனந்த நடராஜன் ஆசி வாழி!
கொம்புடையான் வாரணனின் வாழ்த்தும் வாழி!
கோதை வாணி சக்தி லக்ஷ்மிக் கிருபை வாழி
அம்புவியில் தேசியக் கல்விக் கல்லூரி
ஆசியுடன் பல்லாண்டு வாழி வாழி!!
நம்புனித தேசிய கல்விக் கல்லூரி
நனி சிறந்து கல்வி வளம் நிறைந்தே வாழி!

சுபம்

இங்ஙனம்
'கலாரத்னா' 'கலாபூஷணம்'
'மஹாவித்துவான்'
யாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் M.A

# யுத்தம் எம்மையும் பலிகொள்ள ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது!

## ரணில் கூறுகிறார்

கொழும்பு,மே2

"யுத்தம் முடியும் வரை பொறுங்கள் என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர் கூறி வந்தனர். இப்போது யுத்தம் அவர்களை முடித்து விட்டது. அது எங்களையும் முடிக்க நாம் அனுமதிக்கக் கூடாது."

- இவ்வாறு கூறியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. கடந்த வாரம் தம்மைச் சந்தித்த பத்திரிகையாளர்களிடமே அவர் இவ்வாறு கூறினார்.

இதுவரை இருபது இராணுவ முகாம்கள் இழக்கப்பட்டு விட்டன. முல்லைத்தீவை இழந்தீர்கள். வன்னியை இழந்தீர்கள். இப்போது யாழ்ப்பாணத்தை இழக்கும் நிலையில் உள்ளனர் - எல்லாமே தந்திரோபாயப் பின் வாங்கல் என்கிறார்கள்.

கடைசி நேரத்தில் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவை வடக்குக்குப் பொறுப்பாக அனுப்பி வைத்திருக்கின்றார்கள். இது நோயாளி இறந்த பின்னர் மருத்துவரை அனுப்பியது போன்ற செயலாகும்.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ)

## எரிந்த வாகனங்கள்

தென்மராட்சி,மே2

எரிந்து சேதமடைந்து காணப்படும் வாகனங்கள் போர் முனைப் பகுதியில் இருந்து படையினரால் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன.

கடந்த சில தினங்களாக இத்தகைய வாகனங்கள் படையினரால் கட்டி இழுத்து வரப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

கடந்த வாரம் எழுதுமட்டுவாளில் இருந்து இழுத்துவரப்பட்ட சில வாகனங்களில் புகை கிளம்பியபடி இருந்தது.

தாக்குதல்களினால் இவை தீப்பற்றி எரிந்திருக்கலாம் எனக்கருதப்பட்டது. இந்த வாகனங்கள் கண்டி வீதி வழியாக பலாலிக்கு கொண்டு செல்லப்படுகின்றன.

(ஐ-4-117)

## மாணவர்களுக்கு பரிசளிப்பு

காரைநகர்,மே2

கடந்த டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுபெற்ற காரைநகர் பாடசாலை மாணவர்களைப் பாராட்டி பரிசளிக்கும் வைபவம் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபை இதனை ஏற்பாடு செய்துள்ளது.

முற்பகல் 10.00 மணிக்கு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் எஸ். வேலாயுதபிள்ளை தலைமையிலும்-

முற்பகல் 11.00 மணிக்கு காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் கல்லூரி அதிபர் என்.பரமசிவம் தலைமையிலும் - இந்நிகழ்வு நடைபெறும்.

தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் பி.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.மேற்படி மாணவர்களுக்கான பரிசில்கள் அமரத்துவமடைந்த பிரபல வர்த்தகர் செல்லப்பா கனகசபை அவர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்படவுள்ளதாக வாரிவளவு நல்லியக்கச் சபை செயலர் எஸ்.பத்மநாதன் தெரிவித்தார்.

(ஐ-73)


# இதய அஞ்சலி



(73918)

ஓவியச் செல்வன்
அமரர்
கந்தையா குணசேகரன்

வாழ்வில் நல்லதொரு நண்பனும்
ஓவியத்தில் நல்லதொரு கவிஞனும்
குணம் என்ற சொல்லுக்கேற்ப
சுத்த இதயத்தோடு எம்முடன்
அன்பாகப் பழகிய குணசேகரனே!
உன்பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| கோல்டன் டக்<br>இருபாலைச் சந்தி | துளசி வர்த்தக நிலையம்<br>இருபாலைச் சந்தி | சுவஸ்தி<br>கொமினிக்கேசன், |
| லட்சுமி பவான்<br>இருபாலைச் சந்தி | கோபால் ஆட்ஸ்<br>யாழ்ப்பாணம் | சுவஸ்திகை ரெக்ஸ்<br>இருபாலைச் சந்தி |


## கல்விக் கல்லூரிகளின் ஸ்தாபிதம்......... (தொடர்ச்சி)

1. மாணவர்களின் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்குமான தியாக உணர்வைப் பெற -
2. மக்கள் ஊழியராகக்கடமைகளைப் பொறுப்புடன் நிறைவேற்றவும் -
3. ஆசிரியத் தொழில் கௌரவத்தைப் பாதுகாக்கவும் -
4. தனது தொழில் அபிவிருத்தி மீது சுய ஈடுபாடு காட்ட -
5. கற்பித்தல் தொடர்பான பொறுப்பேற்கும் மனப்பாங்கு, தொழில் வாண்மை வகைகூறல் முன்னுதாரணமாக நடக்க -

ஆசிரியத் தொழில் ஏனைய உயர் வாண்மைத் தொழில்களின் (மருத்துவம், பொறியியல், சட்டம்) அந்தஸ்தைப் பெறும் முயற்சியாகவே நாட்டில் பரவலாக கல்வியியல் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சியன, ஹபிட்டிகம, பஸ்துங் கோரல, நில்வள, மகாவலி, ஸ்ரீபாத, ஊவா, வவுனியா, அட்டாளச்சேனை, மட்டக்களப்பு, அரிபுத்த, காலி, இரத்தினபுரி, பொலநறுவ, குருநாகல், யாழ்ப்பாணம் ஆகிய கல்வியியல் கல்லூரிகள் தற்போது இயங்கிவருகின்றன.

புதிய நூற்றாண்டில் உலகில் வாழும் எல்லாத் தேசிய இனங்கள் போல எமது தமிழ்த் தேசிய இனமும் கல்வி, தொழில்நுட்பம், தொடர்பாடல் போன்ற எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியடைய வேண்டும். அவ்வளர்ச்சிக்கு அடிப்படைக் கட்டுமானங்களை ஆசிரியர்கள் பாடசாலைகளினாலேயே உருவாக்க வேண்டும். பாடசாலைகள் என்பவை புதுமைகாண் உயிர்ப்பு அமைப்பு (School is an Innovative organic System) என்ற அடிப்படையில் உயிர்த் துடிப்பாக இயங்க நல்ல பயிற்சி பெற்ற ஆசிரிய வளம் தேவை. அவ்வளத்தை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வழங்குவதாக!

***- பா.தனபாலன்.***

# அப்பாவிச் சிங்கள இளைஞரை அரசு பலிக்கடாக்களாக்குகிறது

## பதவி விலகக் கோருகிறது ஐ.தே.க

கொழும்பு,மே2

தனிப்பட்ட அரசியல் இலாபங்களுக்காக, அப்பாவிச் சிங்கள இளைஞர்களான இராணுவத் தினரைப் பலிக்கடாக்களாக்கும் சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் உடனடியாகப் பதவி விலகவேண்டும்.

மே தினத்தை முன்னிட்டு ஐ.தே. கட்சி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காக உழைக்கும் இளைஞர்களும், யுவதிகளும் இன்று வீணாகத் தமது உயிர்களைத் துறக்கின்றனர். இந்த நிலை மாற்றப்படவேண்டுமானால் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

இன்று வெகுசனத் தொடர்புச் சாதனங்களின் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் சுதந்திரமாகக் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது.

எனவே சுதந்திரமற்ற சூழ்நிலையை உருவாக்கும் இன்றைய அரசாங்கம் உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

- இவ்வாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

# படையினரின் வீடுகளுக்குச் சென்று அரசுத் தரப்பினர் நேரில் அனுதாபம்

கொழும்பு,மே2

ஆனையிறவுத் தளத் தாக்குதலில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த படையினரின் வீடுகளுக்கு அமைச்சர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களும் நேரில் சென்று ஆறுதல் கூறி வருகின்றனர்.

தெற்கில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பு அலையைச் சமாளிக்கும் வகையில் இவர்கள் நேரடியாக வீடுகளுக்குச் சென்று அன்பளிப்புப் பொருள்களை வழங்குவதுடன் அவர்களுக்கு ஆறுதல் கூறி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மே தினத்தை ஒட்டி நேற்று நிகழ்ச்சிகள் எதனையும் நடத்தவில்லை. அந்த நிகழ்ச்சிக்குச் செலவிடவேண்டிய நிதியை அந்தக் கட்சி காயமடைந்த படையினரின் குடும்பங்களுக்கு வழங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# யாழ்ப்பாணம் பறிபோவதை தடுப்பதே எமது நோக்கம்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு,மே2

யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றுவதே விடுதலைப் புலிகளின் நோக்கம். அதை எப்படியாவது தடுத்துவிடுவதே எமது நோக்கமாகும்.

பளை இராணுவ முகாமின் வீழ்ச்சியை அடுத்து பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசிய'வுக்கு நேற்றிரவு பேட்டியளித்த இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பாலித பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

நாம் அறிந்தவரையில் தற்போது புலிகள் வசமுள்ள ஆட்லறிகள் மற்றும் பீரங்கிகளைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்திலுள்ள எந்தவொரு பெரிய இராணுவ முகாம் மீதும் தாக்குதல் நடத்த முடியாது. எனினும் யாழ்ப்பாணத்தின் தெற்கேயுள்ள இராணுவ முகாம்கள் மீது தற்போது புலிகளால் ஆட்லறித் தாக்குதல் நடத்த இயலும் - என்றும் அவர் கூறினார்.

இதேவேளை -

இராணுவ விமர்சகர் இக்பால் அத்தாஸ் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் -

விடுதலைப் புலிகளால் மேலும் சில மைல் தூரம் முன்னேற முடிந்துள்ளது. இதன் மூலம் பளைப் பகுதி புலிகள் வசம் வீழ்ந்துவிட்டது.

விடுதலைப் புலிகள் யாழ். நகரை நோக்கியா முன்னேறுகின்றார்கள் என்பது குறித்துத் தெளிவாகத் தெரியவரவில்லை.

யாழ்ப்பாணத்தில் மக்கள் அதிகம் வாழ்வதாலும், அங்கு படையினர் பெருமளவில் தங்கியுள்ளதாலும் புலிகள் யாழ். நகரை நோக்கி முன்னேறுவார்களா என்பதை உறுதியாகக் கூறமுடியாது. எனினும் தற்போதைய நிலையில் புலிகள் மேலும் சில மைல் தூரம் முன்னேறி அங்கிருந்து இராணுவ முகாம்கள் மீது மோட்டார், ஆட்லறித் தாக்குதல்களை நடத்தலாம் என்ற கருத்தும் நிலவுகின்றது.

இவ்வாறு அத்தாஸ் தெரிவித்தார்.

ஆனையிறவு முகாம் வீழ்ச்சி அடைந்த சில தினங்களுக்குள்ளாகவே பளை நகரத்தையும் இழந்திருப்பது படையினருக்குப் பெரும் பின்னடைவு என்று வெளிநாட்டுச் செய்தி ஏஜென்ஸிகள் கருத்து வெளியிட்டன. (ஐ-7)

### மீனவரை விடுவிக்க முயற்சி

கொழும்பு, மே2

பங்களாதேஷ் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இருபது இலங்கை மீனவர்களையும் விடுவிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை பங்களாதேஷில் உள்ள இலங்கைத் தூதுவரிடம் கோரியுள்ளதாகவும் -கொழும்பில் உள்ள பங்களாதேஷ் தூதுவரை இன்று சந்தித்து இது விடயமாகப் பேசவிருப்பதாகவும் - அமைச்சர் மேலும் சொன்னார். (இ-க-3-9)

### 'கெல்ட்' வகுப்புக்கள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே2

பல்கலைக்கழகத்துக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான 'கெல்ட்' ஆங்கில வகுப்புக்கள், முன்னர் குறிக்கப்பட்ட அதே நிலையங்களில் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு பரீட்சையுடன் ஆரம்பமாகும் என யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)


**எமது வீடியோ CD வெளியீடுகள்**

※ END OF DAYS
※ THE BONE COLLECTOR
※ ROMEO MUST DIE
※ STORM CATCHERS-2

பிரமிட் CD வெளியீடுகள்

※ நிழல் நிஜமாகிறது
※ கவலையில்லாத மனிதன்
※ திருடாதே
※ அரசிளங்குமரி
※ நான் ஆணையிட்டால்

**ஆர்க் வீடியோ லைபிறறி,**
51, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (C/12021)


# ஏழாலை சூட்டுச் சம்பவம்:

# பலியானோரில் மூன்று சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம்,மே2

ஏழாலைப் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த கார்ச் சாரதியான சங்கானையைச் சேர்ந்த இராசரட்ணம் யோகலிங்கம் (வயது 56) என்பவரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து நேற்று உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மல்லாகம் நீதிமன்ற நீதிவான் எஸ்.பாலசுப்பிரமணியத்தின் உத்தரவின் பேரில் பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று மாலை உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை -

இவருடன் காரில் இருந்த சமயம் சுட்டுக்கொல்லப்பட்ட மற்றும் மூவரின் சடலங்களும் நேற்று வரை அடையாளம் காணப்படவில்லை.

இச்சடலங்கள் அடையாளம் காண்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் -

சந்தேகத்துக்கிடமான வாகனம் ஒன்று வருவதாகக் கிடைத்த தகவலை அடுத்து வீதித் தடைகளை இட்டுப் படையினர் சோதனையில் ஈடுபட்டிருந்ததாகவும் -

அச்சமயம் மேற்படி காரை படையினர் வழிமறித்தபோது அது தரிக்காமல் சென்றதால் பின்னால் துரத்திச் சென்றதாகவும் -

வாகனத்தில் இருந்தோர் கிரனேட்டுக்களை வீசிவிட்டுத் தப்பிச் செல்ல முயன்றவேளை அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் - பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (ஐ-4-5)

# வடக்கு போர் நிலைவரம்:

# கோபுரத்தைத் தகர்த்ததால் தகவல் பெறுவது தாமதமாம்!

## கொழும்பு அதிகாரிகள் கைவிரிப்பு'

கொழும்பு,மே2

ஆனையிறவில் அமைந்திருந்த தொலைத்தொடர்புக் கோபுரத்தைத் தந்திரோபாயமாகப் படையினர் தகர்த்ததால், வடக்குயுத்தம் தொடர்பான தகவல்கள் தாமதமாகவே கிடைக்கின்றன என்று கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

பளை இராணுவ முகாம் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்ததாக வெளியாகியுள்ள தகவல் குறித்துக் கேட்ட சமயமே அவர்கள் இப்படிக் கூறியுள்ளனர்.

பளை மற்றும் அதன் தெற்குப் பகுதியில் கடுஞ்சமர் இடம் பெறுவதாகவும் -

இரு தரப்பும் பீரங்கி, மோட்டார் தாக்குதல்களை மேற்கொள்வதாகவும் மட்டுமே தமக்குத் தகவல் கிடைத்ததாக அந்த அதிகாரிகள் நேற்று முன்தினம் கூறியதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது. (ஐ-3)

### மிருசுவில் கன்னியர்மடம் மூடப்பட்டது

யாழ்ப்பாணம்,மே2

தென்மராட்சியில் தீவிரமடைந்து வரும் யுத்த சூழ்நிலையை அடுத்து மிருசுவில் திருக்குடும்பக் கன்னியர் மடத்தைச் சேர்ந்த அருட் சகோதரிகள் நேற்று அங்கிருந்து வெளியேறினர்.

அருட்சகோதரிகளுடன் கிளாலி மற்றும் பளைப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து மிருசுவில் தேவாலயப் பகுதிகளில் தங்கியிருந்தவர்களும் நேற்று வெளியேறி யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். (ஐ-7)

## நேற்று ஆரவாரமின்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற பொதுக் கூட்டத்துடன் முடிவடைந்தது.

அந்தப் பேரணியில் தீவுப் பகுதியைச் சேர்ந்த 40 தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

மீன்பிடித்தடை மற்றும் பொருளாதாரத் தடை, போர்ச் சூழல் போன்றவற்றால் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான பதாகைகளும், ஊர்திகளும் இந்தப் பேரணியில் காணப்பட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். கிளையின் மே தினக் கூட்டம் அதன் யாழ். அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்றது.

வடபகுதித் தொழிற் சங்கங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த கூட்டம் யாழ். கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இம்முறை மே தினம் ஆனையிறவு வெற்றிவிழாக் கொண்டாட்டமாக இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

ஆனையிறவு படைமுகாம் வெற்றியை எடுத்துக் காட்டும் ஊர்திகள், படங்கள் பேரணிகளில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை -

மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலும் இம்முறை எழுச்சி பூர்வமான மே தினப் பேரணிகள் நடத்தப்பட்டன.

இதேவேளை -

சுவிஸ், பிரான்ஸ் மற்றும் நோர்வே உட்படப் பல நாடுகளில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் மேதினத்தை ஆனையிறவு வெற்றி விழாவாகவே மிகவும் உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாடியதாக அங்கிருந்து வெளியான தகவல்கள் தெரிவித்தன.

அங்கு நடந்த பேரணிகளில் கலந்து கொண்டோர் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படங்களை எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7-5-4-72)

## 50 படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் பளைப் பகுதியில் இருந்து பெருந்தொகையான ஆயுதங்களை மீட்டனர் எனவும்-

செய்தி ஏஜென்ஸி ஒன்று நேற்றிரவு தகவல் வெளியிட்டது.

நேற்றுமுன்னதாக அரசுத் தரப்பு விடுத்த அறிக்கையில் -

பளையில் நேற்றுமுன்தினம் நடந்த மோதல்களில் இராணுவத் தரப்பில் ஓர் அதிகாரியும் 13 சிப்பாய்களும் உயிரிழந்தனர் என்றும்-

14 அதிகாரிகளும் 222 சிப்பாய்களும் காயமடைந்தனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(உ-4-7)

## சந்திரிகா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலும் பெண் ஒருவரால் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்படலாம் என்று இந்திய அதிகாரிகள் எச்சரித்திருந்தனர் என்பதை அதிகாரபூர்வ வட்டாரங்கள் இப்போது உறுதிப்படுத்தியுள்ளதாக அச்செய்தி மேலும் தெரிவித்தது.

டிசெம்பர் 18ஆம் திகதி கொழும்பு நகர மண்டப முன்றலில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் காயங்களுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தப்பியது தெரிந்ததே. (ஐ-உ)

## வேம்பொடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தினர். அதனால் துருப்பினர் பளைக்கு வடமேற்கே - (கண்டி வீதிக்கு மேற்கே) உள்ள வேம்பொடுகேணியை நோக்கி வாபஸ் பெறவேண்டி ஏற்பட்டது.

படையினர் தரப்பில் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டன.

பளைப் பகுதியிலிருந்தும் அதற்கு மேற்கேயுள்ள புலோப்பளைப் பகுதியிலிருந்தும் துருப்புக்கள் வாபஸ் பெற்றனர். (உ-4)


ஏமாந்து விட்டீர்களா!
போலிகளை நம்பாதீர்கள்!!
உங்களுக்காகவே
புதிய பிரிவு

**O/L**

பகல் நேர வகுப்புக்கள்
பிரிவு II

ஆரம்பம்: 3.5.2000
புதன் 7.00 - 12.00

**SUBRA**

கல்வி நிறுவனம் (14)
சித்தன்கேணி

**O/L DAY**

மாணவர்களுக்கான
பிரத்தியேக கணித
மீட்டல் வகுப்பு

திரு. ஸ்கந்தா

செவ்வாய், வியாழன் 4-6
(75922)


# கண்ணீர் அஞ்சலி



## அமரர் கந்தையா குணசேகரம்

(குணம் ஆட்ஸ் உரிமையாளர்)

30.04.2000 அன்று அமரத்துவம் அடைந்த எமது நிறுவனத்தில் நீண்ட காலமாக ஆட்டிஸ்ட் கடமையில் ஈடுபட்டிருந்த பிரபல ஆட்டிஸ்ட் ஆகிய ஆட்டிஸ்ட் குணம் அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஆளணியினர். (75917)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.